கோகுலம்

குழந்தைகள்
மாதமிருமுறை
29-10-1972
30 காசு



உங்களுக்கு மிகப் பிடித்தமான திரைப்படங்கள் "ஈஸ்ட்மென்" கலரில் தயாரிக்கப்படுகின்றன




ஈஸ்ட்மென் கலர் பிலிம்களை கோடக் ஸ்தாபனம் தயாரிக்கிறது

வருடம் பூராவும் நீங்கள் ஒவ்வொரு நாளும் விதவிதமான இந்திய திரைப்படங்களை கண்டுகளிக்கக்கூடும். சில ஞாயிற்றுக் கிழமைகளில் இரண்டு படங்களைக்கூட பார்க்கலாம்! திரைப்படக் காட்சிகள் மகிழ்ச்சி அளிக்கிறது; செய்திகளை அறிய உதவுகிறது, கல்வி அறிவை வளர்க்கிறது. கலர் பிலிம்கள் இந்தகைய நன்மைகளை அதிகமாக அடைய பெரிதும் உதவுகிறது.

கலர் திரைப்படங்கள் அதிக வசூலை அளிக்கிறது என்பதை புள்ளி விவரங்கள் நிரூபிக்கிறது. அமோகமான வசூலைக் கொடுக்கும் பெருவாரியான படங்கள் எல்லாம் "ஈஸ்ட்மென்" கலர் பிலிமில் எடுக்கப்பட்டவை; ஏனெனில் அவைகளின் உயர் தரத்தை—படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், தியேட்டர் சொந்தக்காரர்கள்—ஏன் நீங்களும்கூட நன்கு அறிவீர்கள்.

அகில உலக ஸ்தாபனத்தின் முதிர்ந்த அனுபவத்தின் பின்னணியில், தொடர்ந்து மிகப் பெரிய அளவில் ஆராய்ச்சி செய்வதன் பயனாக, வியாபாரம், தொழில், அச்சுத் தொழில் மருத்துவ சேவை, புகைப்படக் கலை போன்ற தொழில்களில் கோடக் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

உங்களுக்குத் தேவையான விவரங்களுக்கு எமக்கு எழுதவும்:



பார்வைக்குப் புலப்படாத பல சிறப்புக்கள் கோடக்கில் உள்ளன.

Kodak

Kodak Limited
(Incorporated in England with Limited Liability)
Bombay · Calcutta · Delhi · Madras

Kodak and Eastman are trade marks




கோகுலம்

மலர் 1 :: இதழ் 14

அக்டோபர் 29, 1972

பரிதாபி, ஐப்பசி 13





சந்தா விவரம் :

தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம் ரூ. 7-00

ஆறு மாதம் ரூ. 3-50

வெளி நாடுகள் ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக் கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

★

அட்டை வண்ணப்படம் :
வித்யாசாகரா


★



நீங்கள் விற்பது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை மேலும் நன்கு விற்பனை செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் அதிக பட்சமான வாடிக்கையாளர்களின் கவனத்தை உங்கள் கடையின் பக்கம் திருப்புகிறது.



உங்கள் ஜெனரல் ஸ்டோரில் பொருள்களை அதிகக் கவர்ச்சியுடன் காட்சியில் வைக்க உதவுகிறது.




உங்கள் ரெஸ்டாரெண்டில் உள்ள சூழ் நிலையைப் பிரகாசமாக்க உதவுகிறது.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் 100 வாட் பல்பினைப் போல் இருமடங்கு ஒளி தருகிறது. இந்த ஒளி சிறந்ததும், பிரகாசமானதும், கூசாததுமானது, கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது. இருந்தும், மின்சாரச் செலவு ஒரு 40 வாட் பல்புக்காகும் அளவேதான்.

இந்தக்கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் இணைப்பு ஒரு பிலிப்ஸ் 40 வாட் ஃப்ளூரோஸெண்ட் பல்ப் கொண்டது. அது சிறந்த, அதிகப்பிரகாசமான ஒளியைத் தருகிறது. பிரபலமான பிலிப்ஸ் பாலியெஸ்டர் பலாஸ்ட், ஸ்டார்ட்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் மற்றும் ஸ்ப்ரிங்க் இணைந்த ரோடார் லாம்ப் ஹோல்டர் இவைகளைக் கொண்டது பிலிப்ஸ் ஸ்ட்ரிப் லைட். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகத்திற்கு சிக்கனமானது. மேலும் சிறந்த முறையில் விற்பனை செய்ய உதவுகிறது.

இன்றே பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்துங்கள்—உங்கள் வீடு, கடை மற்றும் தொழிற்சாலையில்.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்
மூலம் அரைப்பங்கு செலவில் இருபங்கு வெளிச்சம் பெறுங்கள்.


பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-3539A

ஆத்திசூடி

ராஜாஜி



சோம்பித் திரியேல்

தொழில் செய்யாமல் உணவு சம்பாதிக்க இங்கு மங்கும் சுற்றி அலையாதே. தொழில் செய்வது மனிதப் பிறப்புக்குக் கடமையாகும். பூமியில் உண்டான பொருளைக் கொண்டு உணவாக்கி உண்பவன் ஏதாவது ஒரு தொழில் செய்து உலகத்துக்குக் கடன் தீர்க்க வேண்டும். ஒருவன் சிலகாலம் தொழில் செய்யாமல் சோம்பி இருந்தால் அவ்வழக்கமே உண்டாகும்.

தக்கோனெனத் திரி

சையெனத் திரியேல், என்றது போல் சோம்பித் திரியேல் என்றது போல் தக்கோனெனதிரித் என்ருர். எல்லாரும் இவன் தகுதியுடையவன் என்று சொல்லும்படி நீ நடப்பாய். ஒழுக்கத்தில் தவறு இல்லாமல் நடப்பவன் தக்கோன்.

தானமது விரும்பு

வறுமையினால் வருந்துபவர்களின் குறையைத் தீர்க்கவும் உலகத்தார் நன்மைக்கும் உன்னிடமுள்ள பொருளைக் கொடுக்க இச்சைப்படு. தானம் என்ருல் பசித்தவர்களுக்கு அன்னம் போடுவது, ஏழைகளுக்கு வஸ்திரம் கொடுப்பது, கோயில், சத்திரம், சோலை, கிணறு, வைத்தியசாலை, கல்விச் சாலை முதலியவைகளை உண்டாக்கல்.

திருமாலுக்கு அடிமை செய்

திருமால் - கடவுள்

கடவுளுக்கு அடிமையாகவே எல்லாக் காரியங்களும் செய். கடவுளுக்குப் பிரியமான வழியிலேயே எப்போதும் நடந்து கொள்ள வேண்டும்.





கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

சனகாதி தவமுனிந்திரர்கட்கும் எட்டாத ஈசனே, கண்ணனே, கட்டுவதற்காக யசோதை உரலுக்கு அருகே அழைத்துச் சென்றாள். ''இந்த உரல்தானே உனக்கு உதவி செய்தது? இதிலேயே கட்டி வைப்பேன்'' என்று கூறி ஒரு கயிற்றைக் கொணர்ந்தாள்.

எம்பிரானுடைய இடுப்பில் சுற்றிய கயிறு முன் பக்கத்துக்கே போதியதாக இல்லை. மற்றொரு தாம்புக் கயிற்றைக் கொணர்ந்து முடிந்து சுற்றினாள். அப்போதும் எட்டவில்லை. வேறு ஒரு பெரிய கயிற்றைக் கொணர்ந்து முடிந்து சுற்றினாள். ஒரு சாண் குறைந்தது. இவ்வாறு பல கயிறுகளைக் கொணர்ந்து முடிந்து சுற்றச் சுற்றக் கயிறு போதுமானதாக இல்லை. தாம்புக் கயிறு, தொட்டில் கயிறு, மாடு கட்டுங் கயிறு முதலிய எல்லாக் கயிறுகளையும் கொணர்ந்து முடிந்தாள். கோபிகைப் பெண்கள் தங்கள் தங்கள் வீடுகளிலுள்ள கயிறுகளைக் கொணர்ந்து கொடுத்தார்கள். அத்தனை கயிறுகளை முடிந்தும் ஒரு விரற்கடை அளவுக்கு எட்டவில்லை.

''ஆகா! இது என்ன மாயம்! என் குழந்தையின் இடைக்கு இத்தனை கயிறுகளா?'' என்று அதிசயம் அடைந்தாள் யசோதை.

தாய் கயிறுகளை முடிந்து முடிந்து கை சிவந்து, உடம்பு அயர்ந்து துன்புறுகின்றாள் என்று எண்ணிப் பரம கருணையால் இடையைச் சுருக்கிக் கட்டுப்பட்டார் கண்ணன். அடியார்களின் பாச பந்தக் கட்டுக்களை அகற்றுகின்ற அமலன் தம் தாயிடம் கட்டுப்பட்டார்.

உரலிலே தாமோதரனைக் கட்டிவிட்டு வீட்டு வேலையில் ஈடுபட்டாள் யசோதை. வீட்டின் பின்புறத் தோட்டத்தில் இருந்த இரு மருத மரங்களைப் பகவான் பார்த்தருளினார்.

மருதிடை - வாழ்ந்தார்

குபேரனுடைய குமாரர்கள் இருவர் நளகூபரன், மணிக்ரீவன் என்பவர்கள். பேராற்றல் படைத்தவர்கள். அழகின் சிகரமாக விளங்கினார்கள். இவ்விருவர்களும் கைலாசநாதருக்குப் பணிவிடை புரிந்து வந்தார்கள்.

ஒரு நாள் இவர்கள் அரம்பை மாதர்களுடன் மதுவுண்டு, மயக்கம் கொண்டு ஒரு மலர்த் தடாகத்தில் பெண்களுடன் நீராடிக் கொண்டிருந்தார்கள். அவ்வழியே நாரத முனிவர் சென்றுகொண்டிருந்தார். நீராடிக் கொண்டிருந்த அரம்பையர்கள் நாரத முனிவரைக் கண்டு நாணி ஆடைகளை எடுத்துத் தரித்துக்கொண்டார்கள்.

குபேர குமாரர்களோ குடி வெறியால் மரம்போல் நின்றுகொண்டிருந்தார்கள். தன்னை வணங்காமலும் உபசரிக்காமலும் உடைகள் இன்றியும் மரம்போல் நிற்பவர்களைக் கண்டு நாரதர் ''நீங்கள் மரங்களாகக் கடவது'' என்று சாபமிட்டார்.

நளகூபரனும் மணிக்ரீவனும் சாபத்தைக் கேட்டு அஞ்சி ஆடை யுடுத்தி நாரத மாமுனிவருடைய அடிமலர்மீது விழுந்து வணங்கினார்கள். ''கருணாமூர்த்தி! நாங்கள் அறியாமையால் பிழை செய்து விட்டோம். மன்னித்தருளும்'' என்று வேண்டினார்கள்.

நாரதர் திருவுளம் இறங்கி ''நீவிர் ஆயர்பாடியில் நந்தகோபனாக இனி பிறக்க இருக்கின்ற யாதவ மன்னனுடைய தோட்டத்தில் இரட்டை மருத மரங்களாகப் பிறப்பீர்கள். முப்பத்தாறாயிரம் ஆண்டுகள் மரங்களாக நிற்பீர்கள். யதுகுலம் தழைக்க அவதரிக்கப் போகின்ற பரந்தாமனுடைய பாத மலர் பட்டவுடன் சாபம் தீர்ந்து பண்டை வடிவம் பெறுவீர்கள்'' என்று கருணையுரை கூறினார்.

அதன்படி குபேர குமாரர்கள் மருத மரங்களாக அங்கே நின்று கொண்டிருந்தார்கள். கண்ணபிரான் அவர்களின் சாப விமோசனம் செய்யத் திருவுளங் கொண்டார்.

மெல்ல உரலை உருட்டிக் கொண்டு மரங்களின் இடையே நுழைந்து சென்றார். உரல் அதன் இடையே வராததனால் திருவடி நீண்டி மரங்களை உதைத்தருளினார்.

மரங்கள் வேருடன் சாய்ந்தன; அவர்களின் சாபமும் பாபமும் தீர்ந்தன. அழகிய உருவத்தைப் பெற்றார்கள். கண்ணனுடைய கழலடியில் வீழ்ந்து வணங்கினார்கள்.

பதைத்து வீழப் பூதனையைப்
பாலுண்பான் போல் பண்குலையச்
சிதைத்துக் கொன்ற திருவாளா!
செய்யச் சகடமாக மிக
மதர்த்து வந்த அரக்கனை முன்மாய்த்த
மணியே! மலரடியால்
உதைத்து எம்மை ஆட்கொண்டாய்
ஒப்பில் ஞான உயர்மணியே

''கருணைக் கடலே! கருதுவார் வினை அகற்றும் கண்ணாரமுதே! பரமானந்தப் பெருவாழ்வே! மரமாயிருந்த எங்களை வாழ்வித்த மணி விளக்கே! உமது திருவடித் தொடர்பால் உய்வு பெற்றோம்'' என்று துதி செய்தார்கள்.

கண்ணபிரான் அவர்கள் மீது கருணை புரிந்து விடை தந்தருளினார். குபேர புத்திரர்கள் தமது உலகம் போனார்கள்.

யசோதையும் நந்தகோபனும் கோபியர்களும் மரம் வீழ்ந்த ஓசையைக் கேட்டு ஓடி வந்தார்கள். வானளாவி யிருந்த மரங்கள் வேருடன் வீழ்ந்திருப்பதையும் அவற்றின் அருகில் அஞ்சாது கண்ணன் விளையாடிக் கொண்டிருப்பதையும் பார்த்தார்கள்.

''ஐயோ! இம்மரங்கள் குழந்தை மீது வீழ்ந்திருந்தால் குழந்தை மாண்டிருக்குமே? தெய்வந்தான் நம் குழந்தையைக் காத்தது!'' என்று கூறிக் கண்ணனைத் தூக்கி முத்தம் தந்து, வீட்டுக்குள் எடுத்துச் சென்றார்கள். (தொடரும்)



மாவீரர் சத்ரஸால்

— கௌசிக் —

ராஜபுத்திரர்களின் வீரம் உலகமறிந்த ஓர் ஒப்பற்ற அற்புதம். உலகில் எந்த நாட்டு மக்களுக்கும் இல்லாத அதிசய ஆற்றலும் மனோ திடமும் கொண்டவர்கள் ராஜபுத்திரர்கள். நேர்மைக்கும் உண்மைக்கும் உறைவிடம் அவர்கள். நன்றி மறவாத நாயகர்கள். ராஜபுத்திரர்களின் வீரத்தைக் கேட்கும் கோழையும் கூட வாள் வீசப் பாய்ந்து எழுவான்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே நடந்தது இது. பண்டி என்ற நாட்டின் மன்னன் ராஜா ராவ் சத்ரஸால். மொகலாயர்களின் ஆதிக்கம் வலுவாக இருந்த காலம் அது. சத்ரஸாலைச் சிங்காதனத்தில் அமர்த்தியவர் ஷாஜஹான். ஆரம்பத்தில் ராஜபுத்திரர், அந்நியர்களான மொகலாயர்களின் வரவை எதிர்த்துப் போரிட்டாலும் நாளடைவில் மொகலாயர்களுடன் நட்புக் கொண்டு வாழலானார்கள். அக்பர் ராஜபுத்திர மங்கையையே மணந்து கொண்டார். தமது ஆளுகையிலே ராஜபுத்திரர்களைப் பல உயர்ந்த பதவிகளில் அமர்த்திப் பகையை வென்று விட்டார் அக்பர். அதே போல் அக்பரின் பேரனை ஷாஜஹானும் வீரர் சத்ரஸாலை ஆக்ராவின் கவர்னராக்கிக் கௌரவித்தார். சத்ரஸால் மாவீரர். ஷாஜஹானுக்காக எத்தனையோ போர்களில் வெற்றி வாகை சூடி வந்திருக்கிறார். நன்றி மறவாத நல்ல வீரர் சத்ரஸால். 'ஹாரா' என்ற இனத்தைச் சேர்ந்தவர். 'ஐம்பத்திரண்டு போர்



களில் 'வெற்றி கண்ட மாவீரன்' என்ற பட்டப் பெயர் பெற்றவர் இவர்.

மாமன்னர் ஷாஜஹானுக்கு நான்கு புதல்வர்கள். தாரா மூத்த மகன். ஷூஜா, மூரத், ஔரங்கசீப் ஆகிய மூவரும் இளையவர்கள். தமது சாம்ராஜ்யத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து நான்கு புதல்வர்களையும் தமது பிரதிநிதியாக இருந்து ஆட்சி புரிய அனுப்பியிருந்தார். உலகப் புகழ் பெற்ற தாஜ் மகலைக் கட்டிய மன்னரின் கடைசிக் காலம் மகிழ்ச்சிகரமாக இல்லை. புகைந்து கொண்டிருந்த அரசுரிமைப் போராட்டம் ஒருநாள் குபீரென்று பற்றிக் கொண்டது. தகப்பனுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினார்கள் இளைய புதல்வர்கள். முறைப்படி மூத்தவனான தாரா சிங்காதனத்தில் அமருவதை விரும்பவில்லை தம்பிகள். அதிலும் கடைசி மகனான தந்திரசாலி ஔரங்கசீப் தானே டில்லி சிங்காதனத்தில் உட்காரத் திட்டமிட்டான். நினைத்ததை முடிக்க எதையும் செய்யத் தயங்காத குரூர குணம் படைத்தவன் ஔரங்கசீப்.

அரசுரிமைப் போர் ஆரம்பமான போது தென்னாட்டின் கவர்னராக இருந்தான் ஔரங்கசீப். அவனுடன் இருந்தார் சத்ரஸால். மன்னர் ஷாஜஹான் தம் மைந்தர்களுக்குக் காவலாகவும் துணையாகவும் பல ராஜபுத்திரத் தளபதிகளை அனுப்புவது வழக்கம். ராஜபுத்திரர்கள் தங்கள் படைகளுடன் இளவரசர்களுக்கு ஆலோசகர்களாக இருப்பார்கள். அப்படித் தக்காணத்தில் ஔரங்கசீப்புடன் இருந்தார் சத்ரஸால். தம் தளபதி சத்ரஸாலின் வீரத்தையும் ஆற்றலையும் அறிவார் ஔரங்கசீப். ஆரம்பத்தில் மன்னர் ஷாஜஹானுக்கு எதிராகத் தம் பக்கம் இருக்கும்படி நயமான வார்த்தைகளால் கேட்டுக்கொண்டான் ஔரங்கசீப். ஆனால் சத்ரஸால் சம்மதிக்கவில்லை. நன்றி மறப்பது ராஜபுத்திரர்களின் பண்பில்லையே!

மன்னருக்கு மகன்களால் ஆபத்து ஏற்பட்டுள்ள இந்த வேளையில் தாம் அவர் அருகே இருப்பதையே விரும்பினார் ராஜபுத்திர வீரர். தக்காணத்திலிருந்து கிளம்ப முடிவு செய்தார். சத்ரஸாலின் பிடிவாதமான முடிவை அறிந்த ஔரங்கசீப் அவருடைய கூடாரத்தைச் சூழ்ந்து கொள்ளும்படி தம் மொகலாய வீரர்களுக்கு ஆணையிட்டார். தம்மை டில்லிக்குப் போகவிடாமல் இப்படி ஏதாவது ஔரங்கசீப் செய்வார் என்பதை முன் கூட்டியே அறிந்திருந்த சத்ரஸால் ஔரங்கசீப்பின் ஆட்கள் தம் கூடாரத்தைச் சூழ்ந்து கொள்ளு முன்னமே தமது பரிவாரம் மற்றும் பொருள்களையெல்லாம் எச்சரிக்கையுடன் வெளியேற்றி விட்டார்.



சத்ரஸால் தமது வீரர்களையும், மற்றும் ராஜவிசுவாசமுள்ள ராஜபுத்திரர்களையும் ஒன்று திரட்டினார். தங்களது நன்றிக் கடனைச் செலுத்த ஷாஜஹானுக்காக உயிரையே கொடுப்பது என்று அவர்கள் சபதம் எடுத்துக் கொண்டார்கள். எல்லோரும் மஞ்சள் ஆடை அணிந்தார்கள். ஔரங்கசீப்பின் வீரர்களை எதிர்க்கத் தயாரானார்கள். இதை மொகலாய வீரர்கள் எதிர்பார்க்கவில்லை. முதலில் திகைத்தார்கள். அவர்களுக்குத் தெரியும், ராஜபுத்திர வீரர்கள் இப்படிக் குங்குமப்பூ வண்ண ஆடை அணிந்தால் அதன் பொருள் என்ன என்று. 'வாழ்வு அல்லது சாவு' என்ற முடிவோடு போரிடத்தான் ராஜபுத்திரர்கள் இத்தகைய வண்ண ஆடை அணிவது வழக்கம்.

ஔரங்கசீப்பின் ஆணையாயிற்றே. சத்ரஸாலையும் அவரது படைகளையும் எதிர்த்தார்கள் முகலாயர்கள். நர்மதை நதி வரையில் பின்தொடர்ந்து போனார்கள். நர்மதையில் அப்போது வெள்ளம் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு ஓடியது. வெள்ளத்தினால் வெறி கொண்டு ஓடும் நதியை அவர்களால் கடக்க முடியாது. சுலபமாக மடக்கி விடலாம் என்று மனப்பால் குடித்தார்கள் மொகலாயர்கள். ஆனால் பாவம், ராஜபுத்திரர்களின் தீரத்தை முழுதும் அவர்கள் அறியவில்லை. இந்த ஆற்று வெள்ளமா அவர்களின் வீரத்துக்குத் தடையாக இருக்கும்? வீர குணம் ராஜபுத்திரர்களுக்கு மட்டும்தானா? அவர்களுடைய குதிரைகளுக்குமே கூட உண்டு. ராஜபுத்திரர்களுடைய குதிரைகள் நிகழ்த்திய சாகஸங்கள் எத்தனை எத்தனையோ. வாளாகக் குத்தும் குளிர்ந்த வெள்ள நீரிலே தங்கள் குதிரைகளை விரட்டினார்கள். கம்பீரமாகக் கனைத்துக் கொண்டு குதிரைகளும் ஆற்று வெள்ளத்திலே இறங்கி நீந்தி அக்கரை சேர்ந்தன. சத்ரஸாலும் அவரது சகாக்களும் பத்திரமாக ஆக்ரா நகர் போய்ச் சேர்ந்தார்கள். துரத்தி வந்த ஔரங்கசீபின் ஆட்கள் ஏமாந்து போய் நின்றார்கள்.

மன்னர் ஷாஜஹான் தம் புதல்வர்களின் போக்கினால் மனம் உடைந்து நோய்வாய்ப்பட்டார். புதல்வி ஜஹனாரா நோய்வாய்ப்பட்ட தந்தையின் அருகிலேயே இருந்தாள். பட்டத்துக்கு

உரியவனை சகோதரன் தாராவிடம் அன்பு கொண்டவள் சகோதரி. தகப்பனாரின் ஆசியும் அன்பும் மூத்த மகன் தாராவிடம்தான். ஆகவே தாராவுக்குப் பலம் சேர்க்கத் தீர்மானித்தாள் ஜஹனாரா. வீரர் சத்ரஸால், தம் தம்பி ஔரங்கசீப்பிடமிருந்து தப்பி ஆக்ரா வந்துள்ள செய்தி அறிந்தாள். தன்னுடைய கங்கணத்தை அவருக்கு அனுப்பி வைத்தாள். ஒரு பெண் தன் கங்கணத்தை அனுப்பினால் அவளைத் தன் சகோதரியாக (ராகி பந்த் பாய்) ஏற்றுக் கொள்ள வேண்டும். ராஜபுத்திரர்களின் வழக்கம் இது. சத்ரஸால் ஜஹனாராவைச் சகோதரியாக ஏற்றுக்கொண்டார். அவள் பொருட்டுத் தாராவுக்காக அவனது இரு தம்பிகளான ஔரங்கசீப், மூரத் ஆகிய இருவரின் பெரும் படையையும் சந்திக்கத் தம் இனத்தவர்களுடன் தயாரானார் சத்ரஸால்.


ராஜபுத்திரர்கள் தங்கள் வழக்கமான தீரத்துடன் போரிட்டார்கள். போர்க்களத்தில் இளவரசன் தாராவுக்கு யாரோ ஏதோ தவறான தகவலைத் தரவே தாரா தனது பட்டத்து யானை மீதிருந்து கீழே இறங்கி விட்டான். விரோதிகளின் சதிச் செயல் இது. இளவரசன் தாரா யானைமீதில்லாததைக் கண்ட போர்வீரர்கள், தங்கள் இளவரசன் இறந்து விட்டதாகப் பீதி அடைந்து போர்க் களத்தை விட்டு ஓடத் தலைப்பட்டார்கள். ஆனால் சத்ரஸால் ஓடவில்லை. வீர ராஜபுத்திரராயிற்றே. தம் வீரர்களை நோக்கிக் கர்ஜித்தார். ''ஓடுபவர்கள் கோழைகள்; வெறுக்கப்பட வேண்டியவர்கள். மன்னர் ஷாஜஹானின் உப்பைத் தின்றவன் நான். என் கால்கள் இந்தப் போர்க் களத்திலிருந்து நகராது. வெற்றி பெற்றால்தான் நான் யுத்தபூமியிலிருந்து உயிரோடு திரும்புவேன், நகருவேன்.''

தங்கள் தலைவனின் இந்த வாசகங்களைக் கேட்ட ராஜபுத்திரர்கள் புதிய பலத்துடன் விரோதிகளைத் தாக்கினார்கள். சத்ரஸால் தமது போர் யானை மீது ஏறி அதை நடத்தினார். ஒரு பீரங்கி அவரது யானையைத் தாக்கவே யானை பீதி கொண்டு திரும்பி ஓடலாயிற்று. பண்டிவீரர் சத்ரஸால் அதன் முதுகிலிருந்து கீழே குதித்தார். தமது அருமைக் குதிரையான ஜவாடியாவை அருகே அழைத்தார்.

''என் யானை புறமுதுகிட்டு ஓடலாம். ஆனால் அதன் தலைவனை சத்ரஸால் உயிரோடு ஓர் அங்குலம் கூடப் பின் வாங்க மாட்டான்'' என்று கூறி அருகே வந்த ஜவாடியாவின் மீதேறி இளவரசன் மூரத்தைத் தாக்கலானார். தமது ஈட்டியை மூரத்தின் மீது எறிவதற்கு ஓங்கிய அதே வேளையில் எதிரியின் குண்டு சத்ரஸாலின் தலையைத் துளைத்துச் சென்றது. இந்திய சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒரு மாவீரனின் வாழ்க்கை முடிவுற்றது. சத்ரஸாலின் இனத்தைச் சேர்ந்த அத்தனை ராஜபுத்திர வீரர்களும் அந்தப் போர்க் களத்திலே தங்கள் ராஜ விசுவாசத்தை வெளிப்படுத்தி இளவரசன் தாராவுக்காக உயிரிழந்தார்கள்.

துரோகமும் சூழ்ச்சியும் வஞ்சனையும் வெற்றி பெற்றன. தன் சகோதரர்களையெல்லாம் கொன்றுவிட்டுத் தாமே டில்லி சிம்மாசனமேறினார் ஔரங்கசீப். சாகும்வரையில் தந்தை கைதியாகவே இருந்தார். இது சரித்திரம் கூறும் உண்மை. அதே போல் நன்றிக் கடனைத் தீர்க்கத் தன்னுயிரையே ஈந்த வீரர் சத்ரஸாலின் புகழும் ராஜஸ்தானம் எங்கும் பாடப்படுகிறது.

மாவீரர் ராஜா சத்ரஸால் தலை சிறந்த வீரர் மட்டுமல்ல. கலையுள்ளம் படைத்தவர். பக்திமான். படாணில் கிஷோர் என்ற கோயிலைக் கட்டியிருக்கிறார். சத்ரமஹால் என்ற அரண்மனை இவரது பெயரை நினைவுபடுத்திக் கொண்டு இன்றும் பண்டியில் உள்ளது.




பாம்புகள் எல்லாமே மாமிசப் பட்சிணிகள் தாம். ஆனால், ஆப்பிரிக்காவில் வாழும் ஒரே ஓர் இனப் பாம்பு மட்டும் 'மார் மார்டிகா' என்னும் பழத்தை மாத்திரம் தின்று சாக பட்சிணியாக உயிர் வாழ்கிறது!

★

நூற்றுக்கணக்கான தேள்களை ஒரே இடத்தில் அடைத்துவிட்டுச் சில நாட்கள் கழிந்து வந்தால் அந்த இடத்தில் ஒரே ஒரு தேள் மட்டும்தான் இருக்கும்! ஏனென்றால் இரண்டு தேள்கள் ஒற்றுமையாக இருப்பதில்லை; ஒன்றை ஒன்று கொன்று தின்றுவிடும்! இந்த உண்மையைக் கண்டு பிடித்தவர் இயற்கையை ஆராயும் ஒரு பிரஞ்சு விஞ்ஞானி.

—ஆர்




அமம ஒளிர்ந்திடு
கம்பி மத்தாப்பு
ஆனந்தம் தருகுது
அங்கிருப்போர்க்கு
புகைப்படங்கள் : ஜி. பிரபாகர்

தெரியுமா?

258. இமயமலையின் உச்சியை முதன் முதலில் எட்டிப் பிடித்தது எந்த ஆண்டு தெரியுமா?

259. முயல் குட்டி பிறந்தவுடன் என்ன எடை இருக்கும்?

260. ஆஸ்திரியாவின் தலைநகர் எது?

261. நியூயார்க்கில் ஓர் ஓவியம் 1961ம் ஆண்டு 8,21,400 டாலர்களுக்கு ஏலம் போயிற்று. அந்தப் பிரபல ஓவியத்தை வரைந்தவர் யார் தெரியுமா?

262. 'மஸ்க்வாஷ்' என்றால் என்ன?

263. சோம்னம்புலிஸம் என்றால் என்ன?

264. வாட்டர்லூ எங்கே உள்ளது?

265. டென்மார்க்கின் தலைநகரம் எது?

266. ஒரு சதுர அடிக்கு எத்தனை சதுர அங்குலம்?

267. ஹெப்டகனுக்கு எத்தனை பக்கங்கள்?

268. எத்தனை ஏக்கர்கள் கொண்டது ஒரு சதுர மைல்?

269. இரண்டு சமமான பக்கங்களை உடைய முக்கோணத்துக்கு என்ன பெயர்?

270. ஓர் அங்குலத்துக்கு எத்தனை ஸெண்டிமீட்டர்?

271. பிரேஸில் நாட்டில் பேசப்படும் முக்கிய மொழி எது?

272. இந்திய அரசின் கீழ் வருவதற்கு முன்னால் கோவா யாருடைய ஆதிக்கத்தின் கீழ் இருந்தது?

273. அர்ஜண்டினாவின் தலைநகர் எது?

274. சீனாவின் தலைநகரம் எது தெரியுமா?

275. தென்னாப்பிரிக்காவின் தலைநகரில் ஒன்றான கேப்டவுனின் எல்லையில் ஒரு மலை உள்ளது. அதன் பெயர் தெரியுமா?

276. வாழைப்பழ ஏற்றுமதியில் உலகில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

277. வட அமெரிக்க மலைகளில் உயரமான சிகரம் எது?

278. நம் நாடு சுதந்திரம் பெற்றது எந்த ஆண்டு தெரியுமா?


279. ஒரு குரோஸுக்கு எத்தனை டஜன்?

280. கென்யாவின் தலைநகர் எது?

281. ஷாங்காய் எந்த தேசத்தில் உள்ளது?

282. போலந்தின் பிரதான நதி எது?

258. 1953. 259. ஏழு அவுன்ஸ்கள். 260. வியன்னா. 261. ரெம்ப்ரிராண்ட். 262. மஸ்க் எலியின் ரோமத்துக்குப் பெயர். 263. தூக்கத்தில் நடக்கும் வியாதியின் பெயர். 264. பெல்ஜியத்தில். 265. கோபன் ஹேகன். 266. 144. 267. ஏழு. 268. 640. 269. 'ஐஸாஸிலஸ் ட்ரயாங்கிள்'. 270. 2.54. 271. போர்த்துகீஸிய மொழி. 272. போர்ச்சுகல். 273. ப்யூனஸ் ஐரஸ். 274. பீகிங். 275. டேபிள் மௌண்டன். 276. ஈக்வடார். 277. மிக்கின்லே மலை. 278. 1947. 279. பன்னிரண்டு. 280. நைரோபி. 281. சைனாவில். 282. விஸ்டுலா



மந்திரப் பெட்டி

வாண்டுமாமா

முன்னொரு காலத்தில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் ரொம்பக் கெட்டிக்காரன். தான் செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதுபவன். உழைப்பாளி. நன்றாகப் பாடுபட்டுப் பொருள் சேர்த்த அந்த வியாபாரி பெரும் பணக்காரனானான்.

அவனுக்கு ஒரே பிள்ளை. வியாபாரி இறந்தபின் அத்தனை சொத்தும் அந்தப் பிள்ளைக்குத்தானே. ஆனால் அப்பாவைப் போல் மகன் செல்வத்தைப் பெருக்கவில்லை. அழிக்கலானான். உல்லாசமாக வாழ்ந்தான். ஊதாரிச் செலவு செய்தான். ரூபாய் நோட்டுக்களால் பட்டம் கட்டிப் பறக்க விட்டான். குட்டையில் நீந்தும் வாத்தையோ, வீதியில் ஓடும் நாயையோ விரட்டக் கல்லுக்குப் பதில் காசுகளையே வீசினான். இந்த முறையில் வாழ்ந்தால் பொருள் பெருகுமா? கரைந்தது. ஓட்டாண்டியானான். பணம் இருந்தபோது அவனைச் சூழ்ந்திருந்தவர்கள் இப்போது மறைந்து போனார்கள்.

இந்த நிலையில் அவன் தகப்பனாரின் நண்பர் ஒருவர் வியாபாரியின் மகனுடைய பரிதாப நிலையைக் கண்டு அவனுக்கு ஒரு பெட்டியை அனுப்பி, ''உன் உடைமைகளை இதில் போட்டுக் கொண்டு இந்த ஊரைவிட்டே கிளம்பிவிடு. நன்றாக வாழ்ந்த நீ நலங்கெட்ட நிலையில் இங்கிருக்க வேண்டாம்'' என்று சொல்லி அனுப்பினார்.

வியாபாரியின் மகன் பெட்டியைப் பார்த்தான். அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அது அழகான பெட்டி. பெரிய பெட்டி. அதற்குள் வைக்க அவனிடம் எதுவுமே இல்லை. அதை நினைத்துத்தான் அப்படி வேதனையோடு சிரித்தான். 'என்னையே அந்தப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டால்?' என்று எண்ணிய அவன் மறு நிமிஷமே அதற்குள் ஏறி அமர்ந்து கொண்டான். அது ஓர் அதிசயமான பெட்டி. அதை ஒரு முறை திறந்து மூடினால் அது ஆகாயத்தில் பறக்கும். வியாபாரியின் மகன் பெட்டியினுள் உட்கார்ந்து கொண்டு அதை மூடியதும் குபீரென்று அது உயரக் கிளம்பியது. முதலில் பயம், பிறகு வியப்பு, முடிவில் துணிவு உண்டாயிற்று, அவனுக்கு. மேலே மேலே பறந்த மந்திரப் பெட்டி முடிவாக எங்கோ ஒரு காட்டில் இறங்கியது. வாலிபன் பெட்டியிலிருந்து வெளியே வந்தான். பெட்டியை ஒரு புதரில் ஒளித்து வைத்தான். அருகில் ஏதாவது கிராமம் இருக்கிறதா என்று தேடிப் போனான்.

அவன் இறங்கி இருந்த தேசம் பாரசீகம். அது அவனுக்குத் தெரியாது. கானகத்தை அடுத்து ஒரு பெரிய நகரமே இருந்தது. பெரிய பெரிய கட்டிடங்கள், வீதிகள். செல்வம் கொழிக்கும் நாடு அது. தூரத்தில் உயர்ந்து நின்றது ஓர் உப்பரிகை.

சூரிய ஒளியில் அதில் பதித்திருந்த ரத்தினக் கற்கள் பல்வேறு வண்ணங்களை வாரி இறைத்து ஜ்வலித்துக் கொண்டிருந்தன. வீதியில் போய்க் கொண்டிருந்த ஒருவரை அணுகி, அந்தக் கட்டடம் யாருடையது என்று கேட்டான் வாலிபன். அவர் இவனை விநோதமாகப் பார்த்தார். ''இந்த ஊருக்கு நீ புதியவனா? அது மன்னரின் அரண்மனை. அந்த உப்பரிகையில் இளவரசி இருக்கிறாள். அதியற்புதமான அழகி. ஆனால் அவள் விரும்பும் காதலனால் அவளுக்குத் துன்பமும் வேதனையுமே தொடரும் என்று ஜோசியர்கள் கூறியிருப்பதினால் எந்த ஆண் மகனையும் பார்க்க அவளை அனுமதிப்பதில்லை. மன்னரும் ராணியும் உடனிருக்கும் போதுதான் இளவரசியை மற்றவர்கள் காணலாம். தனியாகப் பார்க்க முடியாது. அதற்காகவே அந்த உயர்ந்த உப்பரிகை கட்டி அதில் அவளை வைத்திருக்கிறார்கள்'' என்றார் அவர்.

வியாபாரியின் மகனுக்கு எப்படியும் இளவரசியைப் பார்த்துவிட வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. அப்பாவின் சொத்துக்களை அசட்டுத்தனமாக அழித்தாலும் அவன் அழகன், புத்திசாலி, சிரிக்கப் பேசும் சுபாவம் உடையவன். உடனே காட்டுக்குப் போனான். ஒளித்து வைத்திருந்த பெட்டியை வெளியில் எடுத்து அதில் அமர்ந்து கொண்டு, ''உப்பரிகைக்குப் போ'' என்று கூறி ஒரு முறை அதைத் திறந்து மூடினான். பெட்டி விண்ணிலே எழுந்து பறந்தது. அரண்மனைகளின் மேலாகப் பறந்து ராஜகுமாரி படுத்துள்ள அறைக்கு வெளியே போய்ப் பெட்டி இறங்கியது. சாளரத்தின் வழியாகப் பார்த்தான் வாலிபன். இளவரசி பட்டு மெத்தையில் படுத்துக் கொண்டிருந்தாள் ஒய்யாரமாக. வாலிபன் தைரியமாக உள்ளே போனான். திடீரென்று தன் முன்னால் ஓர் அந்நியனை — ஆண் மகனைக் — கண்ட இளவரசி திடுக்கிட்டுப் போனாள். வியாபாரியின் மகன் சிரித்தபடியே தான் ஒரு தேவதூதன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். 'உன் அன்பைப் பெறுவதற்காகவே வந்துள்ளேன்' என்றான். இதைக் கேட்க அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. பெற்றோரின் கட்டுப்பாடு அவளுக்குக் கசப்பாக இருந்தது. இருவரும் அருகருகே உட்கார்ந்து கொண்டு பேசலானார்கள். வாலிபன் வக்கணையாகப் பேசுவதில் வல்லவன். இளவரசியின் கண்களின் அழகைப் புகழ்ந்தான். அவள் விழிகள் நீலக் கடலைப் போலிருப்பதாகவும், பளிங்கு நெற்றி பனி மூடிய சிகரம்போல் இருப்பதாகவும் சிவந்த இதழ்கள் செர்ரிப் பழங்களைப் போல் இருப்பதாகவும் அவள் அழகை வர்ணிக்கலானான்.



தன்னைப் புகழும் ஆணிடம் மையல் கொள்ளாத மங்கையும் உண்டா? இளவரசி அந்த வாலிபனிடம் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தாள். ஆனாலும் அவன் தன் தாய் தந்தையருக்குத் தெரியாமல் அவனை மணக்க விரும்பவில்லை. ஆகவே, அவனை மறு நாள் வரும்படி கூறினாள். ''அப்போது என் பெற்றோர்களும் உடனிருப்பார்கள். நான் ஒரு தேவதூதனை மணக்கப் போகிறேன் என்றால் அவர்களுக்கும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். நீ அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அவர்களுக்குக் கதைகள் என்றால் உயிர். என் அம்மாவுக்கு நீதிக் கதைகள் என்றால் ரொம்பப் பிடிக்கும். அப்பாவோ சிரிப்புக்



கதை என்றால் சாப்பாட்டையும் மறந்து விடுவார். ஆகவே, அவர்களுக்கு ஏற்ற படி கதைகள் கூறினால் உன்னை அவர்களுக்கு ரொம்பப் பிடித்துவிடும். என்னை உனக்கு மணம் முடித்துக் கொடுக்கத் தயங்கவே மாட்டார்கள்'' என்று அவனுக்குத் தன்னை அடையும் வழியையும் சொல்லிக் கொடுத்தாள் இளவரசி. ஏனென்றால், அவளுக்கு அவனை ரொம்ப ரொம்பப் பிடித்து விட்டது.

''உன்னை மனைவியாக அடைய நாளை அற்புதமான கதையோடு வருகிறேன்'' என்று கூறி இளவரசியிடம் விடைபெற்றுக் கொண்டான் வியாபாரியின் மகன். பெட்டியில் ஏறிக் காட்டுக்கு வந்தான். அன்று இரவு முழுதும் மறு நாள் சொல்ல வேண்டிய கதையைக் கற்பனை செய்வதிலேயே கழித்தான்.

மறு நாள் அவன் மன்னரின் தர்பாருக்குப் போனபோது அங்கே தன்னை எதிர்பார்த்துக் கொண்டு எல்லாரும் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். மன்னர், மகாராணி, இளவரசி மந்திரி மற்றும் பிரபுக்கள் எல்லாருடைய பார்வையும் அந்த வாலிபன் மீதே பதிந்திருந்தன.

''என் புதல்வி உன்னைப் பற்றி எல்லாம் சொன்னாள். கதையோடு வந்திருக்கிறாயா?'' என்று கேட்டாள் ராணி. ''நீதியைப் போதிப்பதாகவும் அதே வேளையில் கருத்தாழம் கொண்டதாகவும் இருக்க வேண்டும் கதை'' என்றாள்.

''எங்களைச் சிரிக்கவும் வைக்க வேண்டும்'' என்றார் மன்னர்.

'' அப்படியே ஆகட்டும்'' என்ற வியாபாரியின் மகன் கதை சொல்ல ஆரம்பித்தான்.

''முன்னொரு காலத்தில் ஒரு கட்டு மத்தாப்புக் குச்சிகள் இருந்தன. நெருப்புக் குச்சிகளின் தம்பிகள் இவை. அண்ணன் தம்பிகளான இவைகளுக்குத் தங்கள் இனத்தைப் பற்றி ரொம்பப்



பெருமை, கர்வம். கானகத்திலேயே மற்ற மரங்களைவிட மிக மிக உயர்ந்ததும் உபயோகமானதுமான ஒரு விசேஷ மரத்திலிருந்து தோன்றியவர்கள் தாங்கள் என்ற நினைப்புத்தான் அவைகளின் பெருமைக்குக் காரணம். நெருப்புப் பெட்டிக்கும் இலுப்பச் சட்டிக்கும் இடையிலே முடங்கிக் கிடந்த எரிந்து போன நெருப்புக் குச்சி தனது மறைந்து போன இளமை நாட்களைப் பற்றிச் சொல்லிற்று.

'பசுமையான மரத்தின் கிளைகளாக இருந்த காலத்தில் — ஆகா! அது எவ்வளவு மகிழ்ச்சியான காலம்! ஒவ்வொரு நாள் காலையிலும் நாங்கள் குடிப்பது வைரக் காப்பிதான்! புரியவில்லையா? பனித் துளிகள் காலை வெயிலில் வைரம்போல ஜொலிக்காதா? இலைகளின் மீது படிந்துள்ள அவைதான் எங்களுக்கு வைரக் காப்பி! நாள் முழுதும் கதகதப்பான சூரியகாந்தியில் குளிப்போம். சின்னச் சின்னப் பறவைகளெல்லாம் வந்து கதை சொல்லும். மற்றவர்களைவிட நாங்கள் வசதி மிக்கவர்களாக இருந்தோம். காட்டிலே உள்ள மரங்களுக்குக் கோடையிலே தான் ஆடை இருக்கும். மற்றக் காலங்களில் இலைகளையெல்லாம் உதிர்த்து விட்டு வெட்கமில்லாமல் நிற்கும். நாங்கள் கௌரவப்பட்டவர்கள். வருடமெல்லாம் பச்சை ஆடையணிந்து பகட்டாகவே இருப்போம்! ம்... அது ஒரு காலம். பிறகு வெட்டி வந்தான். பாவி, எங்கள் குடும்பத்தையே சிதைத்தான். ஊருக்கே பெரியவர்களான எங்களை வெட்டி வீழ்த்தினான். எங்கள் அம்மா — அடி மரம் — ஒரு கம்பீரமான கப்பலுக்குப் பாய்மரமானாள். ஏழு கடல்களிலும் பவனி வந்து கொண்டிருக்கிறது அந்தக் கப்பல். எங்கள் சகோதரர்களான (கிளைகளை) அண்ணன்மார்களைப் பல்வேறு தொழிற்சாலைகளுக்குக் கொண்டு போனார்கள். எங்கள் தலைவிதி இப்படிச் சாமானியர்களின் சமையல் அறையில் உருண்டு கிடக்கிறோம். நாங்கள் பிறந்த பெருமை என்ன, வளர்ந்து வாழ்ந்த பெருமை என்ன? ம்'' என்று தன் கருகிப் போன தலையைத் தடவிக் கொண்டது நெருப்புக் குச்சி.

எரிந்த நெருப்புக் குச்சியின் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த நெருப்புப் பெட்டி மெள்ள வாயைத் திறந்தது. அதனுள்ளிருந்து ஒரு நெருப்புக் குச்சி எட்டிப் பார்த்துச் சோம்பல் முறித்துக் கொண்டே சொல்லிற்று. ''இதென்ன வெட்டிப் பேச்சு?'' என்றபடி கீழே குதித்து, ''நம்மிலே யார் உயர்ந்தவர் என்பதை முடிவு கட்டுவோம்'' என்றது.

''ம் ஹூம்.... நான் இதில் கலந்து கொள்ள முடியாது'' என்றது குளிர்ந்த நீரால் நிறைந்திருந்த மண் கூஜா. ''என்னைப் பற்றி நானே சொல்லிக் கொள்வதும் எனக்குப் பிடிக்காது. நான் பிறந்ததையும், வளர்ந்ததையும் வாழ்ந்ததையும் கூறினால் பலருக்கு அது பொறாமையாகவும் இருக்கும். ஏன் இந்த வம்பு? காவேரிக் கரையிலே குயில்கள் கூவும், மாஞ்சோலையிலே உள்ள மண்ணை எடுத்து என்னை உருவாக்கினார்கள். ம்.... அந்தப் பழங் கதையெல்லாம் இப்போது ஏன்?''

''அழகான ஆரம்பம்'' என்று உடல் தட்டி ஓசை உண்டாக்கின எவர்சில்வர் தட்டுக்கள். ''கதை சொல்றதுன்னு இப்படித்தான் சொல்லணும். அம்மா சரோஜா, கூஜா! மேலே தொடரலாம். சுவாரசியமா யிருக்கிறது'' என்றன.

'' என்னத்தைச் சொல்ல? பெரிய குடும்பத்திலே வாழ்க்கைப்பட்டேன். அரண்மனை போன்ற வீடு. தரையெல்லாம் விரிப்பு. எங்கு பார்த்தாலும் விசிறி, விளக்கு. ஒரு தும்பு தூசி இருக்கணுமே, ம்ஹூம். பேசப்படாது.''

''' எவ்வளவு சுவாரசியமாயிருக்கு? விஷயங்களைத்தான் நீ எப்படி விவரிக்கிறாய்?'' என்று வியந்தது துடைப்பக் கோல். ''உன் குரல்தான் எத்தனை இனிமையாக இருக்கு. சுத்தம்தான் சுகம். சுகம்தான் சந்தோஷம்'' என்று முழக்கியது துடைப்பம். ''உண்மைதான்'' என்று ஆமோதித்தன எல்லாப் பாத்திரங்களும். ''கதை சொல்லுவதில் ராணி இந்தக் கூஜா. ஆகவே, இதற்கு மலர்க் கிரீடம் சூட்டுகிறேன்'' என்று, பூஜை அலமாரியில் சுவாமி படத்தின் மீதிருந்த மாலையை எடுத்துக் கூஜாவுக்குச் சூட்டியது. '' இன்று இதற்கு நான் மலர்க் கிரீடம் அணிவித்தால் நாளைக்கு இது எனக்கு அதைத் திருப்பிச் செய்யாமலா போகும்?'' என்றது துடைப்பம்.

இவைகளின் பேச்சுக்களை அரைக் கண் மூடிக் கேட்டுக் கொண்டிருந்த அடுப்புத் தணல் மெல்லக் கண் திறந்தது. தன் தீ ஜ்வாலை உடலை நீட்டி நெளித்துக் கொண்டு எழுந்து நின்றது. 'ஆகா, என்ன பளபளப்பு! எத்தனை மினு மினுப்பு! இந்தச் செந்தழலுக்குத் தான் என்ன அழகான உடல்!' என்று வியந்தன சமையலறைப் பொருட்கள். ''நான் நாட்டியமாடப் போகிறேன்'' என்று கூறி ஜிகுஜிகுத்தது ஜ்வாலை.

'' சுத்த ஒழுக்கங்கெட்டவள், இப்படியா ஒருத்தி தன் உடலை நெளித்து

ஆடுவாள்? சீ!'' என்று முகம் திருப்பிக் கொண்டது நெருப்புக் குச்சி. அதற்குப் பொறுமை. இந்தச் சமயத்தில் சமையலறைக் கதவு திறந்தது. சமையல்காரி உள்ளே வந்தாள். பாத்திரங்களெல்லாம் 'கப்சிப்' என்று அதனதன் இடத்தில் ஆடாமல் அசையாமல் இருந்தன. தீக்கொழுந்தும் அடங்கி ஒடுங்கி ஒளிந்து கொண்டது சாம்பலுக்குள்.

அன்று தீபாவளி. விடியற் காலை நேரம். சமையல்காரியைப் பின் தொடர்ந்து வந்த வீட்டுப் பையனும் பெண்ணும் நமுப்பைப் போக்க அடுப்படியில் முதல் நாள் வைத்திருந்த பட்டாசு வெடிகள் நிறைந்த தட்டிலிருந்து மத்தாப்புப் பெட்டியை எடுத்துப் பெட்டியின் பக்கங்களில் உரசினார்கள். 'பளிச்!'— ஆகா, என்ன சிவப்பு கண்ணைக் கூசும் ஒளி. 'பளிச்' அப்பா? என்ன குளுமை! என்ன இதமான பச்சை வண்ணம்!

''எத்தனை அழகான வண்ண ஒளியை நாங்கள் தருகிறோம் என்பதைப் பார்த்த பிறகாவது யார் உயர்ந்தவர் என்பதை இவைகள் புரிந்து கொள்ளட்டும்.....'' என்று நெஞ்சை நிமிர்த்தி ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் போதே மருந்து தீர்ந்து போனதினால் பட்டென்று அணைந்தது மத்தாப்பு. குப்பென்று கவிந்தது இருள்.


வியாபாரியின் மகன் தன் கதையை நிறுத்தினான். ராணி கைதட்டிப் பாராட்டினாள். ''சுவாரசியமான கதை. உன் கதை என்னைச் சமையல் அறைக்குள்ளே இருக்கும் உணர்வை எனக்கு உண்டாக்கி விட்டது. என் மகளை உனக்குத் தர வேண்டியதுதான்'' என்றாள்.

''மகிழ்ச்சியூட்டும் கதை. என் மகளை மணக்கும் தகுதி உனக்குண்டு. இன்னும் ஒரு வாரத்தில் உங்கள் திருமணம் நிகழும். என் ஒரே மகளின் திருமணத்தைக் கோலாகலமாக நிகழ்த்துவேன்'' என்றார் மன்னர்.


வியாபாரியின் மகனுக்குச் சந்தோஷமான சந்தோஷம். ராஜாவின் பெண், அழகே உருவான அரச குமாரி அவனுக்கு மனைவியாவதானால் மகிழ்ச்சியாக இருக்காதா பின்னே? தன் சந்தோஷத்தை எப்படி வெளிப்படுத்தலாம் என்று யோசித்தான். அன்று தீபாவளி என்பது நினைவுக்கு வரவே, தன் சந்தோஷத்தில் எல்லாரும் பங்கு கொள்ள வேண்டும் என்று நினைத்தான். ஆகவே, ஏராளமான வாணங்களையும் ராக்கெட்டுக்களையும் புதை வாணங்களையும், அவுட்டுகளையும் வாங்கித் தன் மந்திரப் பெட்டியில் நிரப்பிக் கொண்டான். வைரங்களை வாரி இறைத்தது போன்ற வான வீதியிலே பெட்டி பறந்தது. அதிலிருந்தபடி பல விதமான வாணங்களைக் கொளுத்தி வீசினான் வியாபாரியின் மகன். பூப்பூவாகக் கொத்துக் கொத்தாக வர்ண விசித்திரங்களாக அந்த வகை வகையான வாணங்கள் வானத்திலே சிரித்துச் சிதறின. நகரத்து மக்களெல்லாம் அந்த அதிசயமான வாண வேடிக்கையைக் கண்டு மகிழ்ந்து போனார்கள். ''நம் இளவரசிக்குக் கல்யாணம் இல்லையா? அதுதான் இத்தனை கோலாகலம். மாப்பிள்ளை தேவதூதனும். அவனுடைய ஏற்பாடுதான் இந்த அற்புதமான வாண வேடிக்கைகள்'' என்று எல்லாரும் பேசிக் கொண்டார்கள்.

வாலிபன் பெட்டியை வழக்கப்படி கானகத்தில் கொண்டு போய் ஒளித்து வைத்துவிட்டு நகரத்துக்குள் வந்தான், ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைக் கேட்பதற்காக. பிரதான வீதிகளில் சுற்றியலைந்து அவர்களின் பேச்சைக் கேட்டுத் திருப்தியடைந்த அவன் 'இவர்களுக்கு இன்னும் கொஞ்சம் வாண வேடிக்கை காட்டலாம்' என்று கானகத்துக்குப் போனான் பெட்டியை எடுக்க. ஆனால் அங்கே அவன் கண்டதென்ன? அந்த மந்திரப் பெட்டி எரிந்து கொண்டிருந்தது. அருகே ஓடிப் போவதற்குள் அது சாம்பலாகிவிட்டது. ஐயோ! அவனுக்கு எப்படி இருக்கும்? வானத்திலே வாண வேடிக்கைக்காகக் கொளுத்திப் போட்ட வாணங்களில் ஒன்று பெட்டிக்குள் விழுந்திருக்கிறது. அதை அவன் கவனிக்கவில்லை. இனி அவனால் விண்ணிலே பறக்க முடியாது. தேவதூதனாக ராஜகுமாரியின் முன்னால் போக முடியாது. அவன் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்.


அரச குமாரிக்கு ஜோசியன் சொன்னது பலித்துவிட்டது. அவள் உள்ளங் கவர்ந்த காதலன் அவளிடம் இனி வரமாட்டான். துன்பமும் வேதனையும் தான் பாவம் அவளுக்கு. உப்பரிகையில் நின்றபடி வானத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள், தன்னை மணக்கப் போகும் தேவதூதன் வரமாட்டானா என்று. வியாபாரியின் மகனோ ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கிறான். குழந்தைகளை அழைத்து வைத்துக் கொண்டு நவநவமான கதைகளைக் கூறுகிறான். ஆனாலும் அன்று அந்த அரண்மனையில் அரச குமாரியின் முன்னால் சொன்னதைப் போல் அவன் கதைகளில் உற்சாகம் வழியவில்லை, மகிழ்ச்சி பொங்கவில்லை. பாவம், வியாபாரியின் மகன்! பாவம், அரச குமாரி!


வீரா
வீரன்
கதை:
சித்திரம்:
14
ஒரு நாள் ரஹீமும் அவன் படையினரும் நகருக்கு வெளியேயுள்ள கானகத்துப் பகுதியில் அலைந்து கொண்டிருந்தனர். அவர்கள் இருந்தது ஒரு குன்றின் மீது. அங்கிருந்து பார்த்த போது......
அதோ பார் நவீன். நம்மை அழிக்க இத்தனை விமானங்களும் வந்து இறங்கியுள்ளன. ஏதோ பெரிய தாக்குதலுக்கான அறிகுறி இது.
இருள் சூழ்ந்து வரும்
சமயத்தில் வானத்தில்
விமானம்....
வருவது நமது நட்பு நாடான இந்தியாவின் விமானம். பாவிகள் பல முள்ள 'தர்ச்லைட்' கொண்டு அதைத் தங்கள் விமானங்களும் பீரங்கிகளுக்குக் காட்டிக் கொடுக்கிறார்கள்.
இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் போதே இந்திய விமானம் வீசிய குண்டொன்று வெடித்து அதன் அதிர்ச்சியில் இவர்கள் நிலை குலைந்து போகிறார்கள். பழக்கப்பட்ட ரஹீம் குப்புறப் படுத்துக் கொண்டான். அந்த நிலையிலேயே ஒரு திட்டமும் உருவாகியது அவன் உள்ளத்திலே.
இந்திய விமானங்களுக்குப் பாகிஸ்தான்
விமான தளத்தைக் காட்டிக் கொடுக்கத்
திட்டமிட்டனர். மறுநாள் மாலை விமானப்
படைத்தளத்தின் பக்கம் பதுங்கிப் போன
கள் அங்கே.......
ஜம்பு, ஜிம்மி! நீங்கள் இருவரும் உங்கள் திறமையைக் காட்டுங்கள்....


த்த விநாடி குரங்கும் நாயும் 'பாக்' வீரர்களை 'லபக்'கென்று போய்க் கௌவின!
னால் ரஹீமும் நவீனும் விரைந்தார்கள் கயிறுகளுடன்.
காத்த நேரத்தில் இரண்டு பேரையும்
ட்டி உருட்டினார்கள்...
முதல் நாள் தங்கி இருந்து பார்த்த
குன்றுக்கு ஜீப்பை ஓட்டிக் கொண்டு
போனான் நவீன்.
ந்திய விமானங்களின் வருகைக் காகக்
த்திருந்தார்கள். மற்றொரு 'சர்ச் லைட்' ஒளி
விண்ணிலே நீண்டது. விமானங்களின் வருகை
லி காற்றிலே மிதந்து வந்தது.
அதோ இந்திய விமானங்கள் வருகின்றன அவர்களுக்கு நாம் உதவும் சமயம் நெருங்கி விட்டது.


இதோ வெளிச்சம் போட்டுக் காட்டு கிறேன். தோழர்களே நீங்கள் குண்டு வீச வேண்டிய இடம் இதுதான். பாகிஸ்தானிய விமானங்கள் தவிடு பொடி யாகட்டும்.
இந்த உதவி போதாதா? இந்திய விமா னங்கள் விண்ணிலிருந்து குண்டுகளைக் குறி தவறாமல் உதிர்த்தன. நிறுத்தப்பட்டிருந்த எதிரி விமானங்கள் சிதறின...
வெற்றி.. வெற்றி! நம் திட்டம் வெற்றி! இந்த ராட்சச 'சர்ச் லைட்'டையும் அழித்து விடுவோம். இதை இப்படியே 'ஸ்டார்ட்' செய்து குன்றின் இறக்கத்தில் செலுத்து....
சரியான இடத்தில் ரஹீமும் நசீமும் ஜீப்பிலிருந்து குதித்து விட்டார்கள். சரிவில் முழு வேகத்துடன் ஓடிய 'லைட்' தாங்கிய ஜீப்........
விமான தளத்தில் கொழுந்து விட்டெரியும் ஒரு விமானத்தில் போய் மோத அதுவும் தீப் பிடித்துக் கொண்டது.
எத்தனை பெரிய சாதனை யைச் செய்திருக்கிறோம் இன்று!
முக்தி வாஹினி யின் முதல்வர் இதை அறிந்தால் உனக்கு வீர சக்கர விருது வழங்குவார்.
தொடரும்...






என்னா வினோதம் பாரு!

- உலகிலுள்ள குரங்கு வகைகள் பலப் பல. நீங்கள் மேலே பார்ப்பது தென் அமெரிக்காவில் உள்ள அமேஸான் காடுகளில் மட்டுமே காணப்படும் ஒரு வகைக் குரங்கு. 'சகி' என்று இதற்குப் பெயர். இவைகளின் தலை வெண்மையாக இருக்கும். அடர்ந்த காடுகளுக்குள் வாழும் இதன் ஆகாரம் வெறும் இலைகள் மட்டுமே.

- அதோ அவர் அணைத்துக் கொண்டிருக்கிறாரே, அது இந்தோனேஷியா அருகே செலிபிஸ் தீவின் மலைகளில் உள்ள காடுகளில் வசிக்கும் குள்ள எருமை. அனாவ் என்று பெயர். இவை முழு வளர்ச்சி அடைந்தாலும்கூட இரண்டு அடி உயரமே இருக்கும்.

- 'பிளாஸ்டிக் சர்ஜரி' மனிதர்களுக்கு மட்டும்தானா? இதோ ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் பிரிமர்ஹாவன் விலங்குக் கண்காட்சியில் உள்ளது, நம் பாரத நாட்டைச் சேர்ந்த இந்தப் பறவை. பெரிய அலகுடைய இந்த மொங்காணுக்கு மேல் அலகு உடைந்து விட்டது. இதற்குப் 'பிளாஸ்டிக்' அலகைப் பொருத்திவிட்டார்கள். கொஞ்ச நாள் இந்தச் செயற்கை அலகு அதற்குத் தொந்தரவாக இருந்தது. ஆனால் பழகிப் போகவே இப்போது சகஜமாக அந்தச் செயற்கை அலகினாலேயே சாப்பிடுகிறது.

படங்கள் உதவி: டாட் - யு. பி. எஸ்.







ஏமாந்த நரி

H. சுரேஷ்

ஒரு பெரிய காட்டில் ஓங்கி வளர்ந்த ஒரு பெரிய மரம் இருந்தது. அந்த மரத்தின் உச்சியில் கூடு கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தது ஒரு கழுகு. அம்மரத்தின் அடியில் ஒரு பொந்து இருந்தது. அந்தப் பொந்தில் வாழ்ந்து வந்தது ஒரு பூனை. கழுகுக்கு மூன்று குஞ்சுகளும் பூனைக்கு நான்கு குட்டிகளும் இருந்தன. கழுகும் பூனையும் இணை பிரியாத நண்பர்களாகப் பல நாட்களாக வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் அந்தக் காட்டின் ஓர் இடத்தில் ஒரு சோற்று மூட்டையைக் கண்டது கழுகு. அந்தச் சோற்று மூட்டை ஒரு வேடனுக்குச் சொந்தமானது. அந்த வேடன் தினமும் அந்த இடத்தில் அதை வைத்துவிட்டு வேட்டையாடச் செல்லுவான். ஒரு நாள் அவன் திரும்பி வந்து சோற்று மூட்டையைப் பார்த்தான். சோற்று மூட்டை அங்கு இல்லை.

வேடன் சோற்று மூட்டையை வைத்துவிட்டுப் போனவுடன் கழுகு அந்தச் சோற்று மூட்டையைக் கொத்திக் கொண்டு தன் இருப்பிடத்துக்கு வந்து விட்டது. கழுகின் வருகைக்காகக் காத்திருந்தது பூனை. கழுகு கொண்டு வந்த மூட்டையைப் பூனை பிறாண்டிக் கிழித்தது. அதில் இருந்த உணவைக் கழுகும், பூனையும் பகிர்ந்து உண்டன. இப்படியாக வேடனின் சோற்று மூட்டையைச் சில நாட்கள் வரை தூக்கி வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தன கழுகும் பூனையும்.

வேடன் தினமும் ஏமாந்து வந்தான். இதனைக் கண்டுபிடிப்பதற்காகச் சோற்று மூட்டையை வழக்கமான இடத்தில் வைத்துவிட்டு மரத்தின் பின்புறத்தில் ஒளிந்திருந்து பார்த்தான். கழுகு வந்தது. சோற்று மூட்டையை வழக்கம்போல் தூக்கிச் சென்றது. பூனையிடம் கொடுத்தது. பூனை மூட்டையைக் கிழித்தது. உணவை இரண்டும் உண்டன. வேடன் இதனைக் கவனித்துக் கொண்டேயிருந்தான். அவற்றின் செய்கைகளைக் கண்டு வியந்தான். கழுகும், பூனையும் இப்படி இணைபிரியாது உணவு உண்டதை அவன் மகிழ்ச்சியாகக் கண்டு களித்தான்.

அது முதல் வேடன் இரண்டு சோற்று மூட்டைகளைத் தினசரி கொண்டு வரலானான். ஒன்றைக் கழுகு வரும் இடத்தில் வைத்துவிடுவான். அதைக் கழுகு எடுத்துக் கொண்டு போய்விடும்.

இந்தச் செய்கையினைக் கண்டது ஒரு நரி. தனக்கு அந்த அருமையான சோற்று மூட்டை கிடைக்கவில்லையே





என்று அது வருந்தியது. அந்த மூட்டை கிடைப்பதற்கு என்ன வழி என்று வெகு நேரம் யோசனை செய்தது நரி.

நரிதான் தந்திரத்தில் புலியாச்சே! உடனே அது கழுகிடம் சென்றது. ''கழுகாரே! உம்முடைய குஞ்சுகளைத் தின்பதற்குப் பூனை சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது. வேண்டுமென்றால், நாளை பாரும். பூனை வெளியே செல்லவே செல்லாது'' என்றது. கழுகும் மறுநாள் கூட்டுக்குள்ளேயே இருந்துவிட்டது. சோற்று மூட்டையை எடுக்க அது செல்லவில்லை. நரி பூனையிடம் சென்றது. ''பூனையாரே! நாளைக்கு உமது குட்டிகளைக் கழுகு தின்னப் போகிறதாம். பாரேன், நாளைக்குக் கழுகு கூட்டை விட்டு வெளியில் செல்லவும் செல்லாது. சோற்று மூட்டையையும் எடுத்து வராது'' என்று கூறியது.

இது இப்படி இருக்க, வேடனின் மனைவி வேடனைப் பார்த்து, ''ஏன், தினமும் இரண்டு சோற்று மூட்டைகளை எடுத்துச் செல்லுகிறீர்கள்?'' என்று கேட்டாள். தினமும் சாக்குபோக்குச் சொல்லி வந்த வேடன் அன்று உண்மையைச் சொல்லி விட்டான். இதைக் கேட்ட வேடனின் மனைவி மிகக் கோபம் அடைந்தாள். அன்றைய தினம் விஷம் கலந்த சோற்றைச் சிறிய மூட்டையாகக் கட்டி, 'இந்த மூட்டை கழுகுக்கு' எனத் தனியாகப் பிரித்தும் கொடுத்தாள். இதை அறியாத வேடன் அந்த விஷம் கலந்த சிறிய பொட்டலத்தைக் கழுகுக்கு வைத்துச் சென்றான்.

அந்தோ பாவம்! வந்தது கழுகு அல்ல; நரிதான்!

நரி சோற்று மூட்டையைப் பிரித்து அதில் இருந்த உணவை ஆவலுடன் உண்ண ஆரம்பித்தது. அதுதான் விஷம் கலந்த உணவாயிற்றே! சிறிது நேரம் கழித்துத் தலை சுற்றிக் கீழே விழுந்து அந்த இடத்திலேயே இறந்து கிடந்தது. இதனைக் கழுகும், பூனையும் எப்படியோ அறியலாயின. நரியின் தந்திரமும் தெரிந்தது. மறுபடியும் கழுகும் பூனையும் இணைபிரியாத நண்பர்களாக வாழ்ந்து வந்தன.

அட்டைப்படக்
கவிதை

சின்ன வீடு

சின்னச் சின்ன வீடுபார்!
செலவில்லாத வீடுபார்!
மண்ணில் கட்டும் வீடுபார்!
மாடி வந்த வீடுபார்!

காசுவேண்டாம் பணமும் வேண்டாம்
கான்கிரீட்டுச் சிமெண்டு வேண்டாம்!
பூசவேண்டாம் மெழுக வேண்டாம்!
பூட்டுக் கதவு எதுவும் வேண்டாம்!

காவல் காக்க நாயும் வேண்டாம்!
காத்துநிற்க ஆளும் வேண்டாம்!
ஏவல்வேண்டாம்! எடுக்க வேண்டாம்!
எழுந்துநிற்க யாரும் வேண்டாம்!

காலம்வேண்டாம்! நேரம் வேண்டாம்!
கட்டிமுடிக்க ஆளும் வேண்டாம்!
காலைஊன்றி மண் குவித்துக்
கட்டும் நமது வீட்டுக்கே!

— 'சுப்ர. பாலன்'





சுண்டு குண்டு சீமாத் தாத்தா

சாமா

ஊரிலே பெரிய சர்க்கஸ் வந்திருந்தது. நம் நாட்டு சர்க்கஸ் கூட இல்லை. ரஷ்ய சர்க்கஸ். உலகப் புகழ் பெற்ற சர்க்கஸ் கலைஞர்கள் அற்புதமான வேலைகளையெல்லாம் செய்து காண்பிப்பதாகப் பேசிக் கொண்டனர். சீமாத் தாத்தா குண்டுவையும் சுண்டுவையும் ரஷ்ய சர்க்கஸுக்கு அழைத்துப் போவதாகக் கூறினார். சுண்டுவுக்கும், குண்டுவுக்கும் ஒரே மகிழ்ச்சி. ரஷ்யக் கலைஞர்களிடமிருந்து 'ஆட்டோகிராப்' சேகரித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டனர். கொஞ்ச நாட்களாகவே அவர்களிடம் இந்த ஆட்டோகிராப் வாங்கும் வெறி ஏற்பட்டிருந்தது. யாரிடமும்எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆட்டோகிராப் நோட்டை நீட்டி விடுவார்கள்.

அன்றும் சர்க்கஸில் அப்படித்தான். நீண்ட குச்சி மீது நடந்து வந்துகொண்டிருந்தான் உயர்ந்த மனிதனான பபூன். அவனிடம் ஓடிப் போய் ஆட்டோகிராப் நோட்டை நீட்டவே, பபூன் அந்த உயரத்திலிருந்தபடி நோட்டை வாங்க, அது கைதவறி விழ, அதை எடுக்க அவன் குனிய, குச்சியிலிருந்த அவன் கால் நழுவி பாலன்ஸ் இழந்து கீழே விழ ஒரே ரகளை! ஆனால் நம் பயல்கள் அப்படியும் அவனிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டுதான் நகர்ந்தார்கள்.

சர்க்கஸ் மைதானத்தில் இரும்புக் கூண்டு அமைக்கப்பட்டது. சிங்கங்களும் புலிகளும் கூண்டுக்குள் விரட்டப்பட்டன. அவைகளை ஆட்டி வைப்பவர் ஒரு கையில் நாற்காலியும் மறு கையில் துப்பாக்கியுமாக அவைகளுக்கு ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தார். சுண்டுவும் குண்டுவும் ஆட்டோகிராப் நோட்டுடன் கூண்டுக்குள் புகுந்து விட்டார்கள். பையன்களின் துணிவைக் கண்டு சர்க்கஸ் வீரர் மகிழ்ந்தார். ''என் இரு கைகளும் காரியமாக இருக்கின்றனவே, எப்படிக் கையெழுத்துப் போடுவேன்?'' என்றார் ரஷ்ய வீரர். ''கவலைப்படாதீர்கள். நாங்கள் இருக்கிறோம்'' என்று சுண்டு அவர் ஒரு கை நாற்காலியை வாங்கிக் கொள்ள, குண்டு துப்பாக்கியை வாங்கிக் கொள்ளச் சிங்க வீரர் நோட்புக்கில் கையெழுத்துப் போட, கூடாரத்தில் ஒரே அப்ளாஸ்!

அடுத்து பளு தூக்கும் ஆளிடம் போனார்கள். அவர் தூக்கும் பளுவை இவர்கள் சுமந்து கொண்டு — தோற்றத்தைப் போல அது அவ்வளவு கனமல்ல என்ற ரகசியத்தை ரசிகர்களுக்கு உணர்த்தி-ஏககைதட்டல்களைப் பெற்றுக் கையெழுத்தையும் வாங்கிவிட்டார்கள்.

சீமாத் தாத்தாவுக்கு இந்தப் பயல்களின் ஆட்டி போதும் போதுமென்றாகி விடவே, இருவரையும் இழுத்துக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார். அங்கும் இவர்களுக்கு ஆட்டோகிராப் வெறி கிளம்பியது. எதிர் பிளாட்பாரத்தில் ஒரு ரயில் கிளம்பத் தயாராக இருக்கவே கார்டிடம் கையெழுத்துக்கு ஓடினார்கள். அவர் கீழே நின்று கொண்டு பச்சை விளக்கை ஆட்டிக் கொண்டிருந்தார். குண்டு சுண்டு அவரிடமிருந்து விளக்கை வாங்கிக் கொண்டு கையெழுத்துக்கு யாசிக்கலானார்கள். கார்டு கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கும்போது இவர்கள் விளக்குக் காட்டவே ரயில் போயே போய்விட்டது. பாவம் கார்டு! பச்சை — விளக்குடன் ஓடினார், ஓடும் வண்டியைப் பிடிக்க!




தீபாவளிக் கோபம்!

நெல்லை ஆ. கணபதி




அப்பா வுக்கு அம்மா மீது
அடக்க முடியா ஒருகோபம்!
ஆறிப் போச்சு! காய்ச்சிய எண்ணெய்
ஆகையி னாலே சிறுகோபம்!

பாட்டிக் கெங்கள் தாத்தா மீது
பாய்ந்து வந்தது ஒருகோபம்!
பட்டுப் புடவை கிழவிக்(கு) எதற்கு?
என்றார்! அதனால் சிறுகோபம்!


அக்கா வுக்குத் தம்பி மீது
அன்பு மிகுதியால் ஒருகோபம்!
அத்திம் பேரைக் கிண்டல் செய்தான்!
அதனால் வந்தது சிறுகோபம்!

வாண்டுப் பயலுக்(கு) அப்பா மீது
வந்ததே அம்மா ஒருகோபம்!
வாங்கிய வெடிகள் போதா(து) இன்னும்
வாங்கணும் என்றே சிறுகோபம்!

பாப்பா வுக்கும் அனைவரின் மீதும்
பற்றி வந்தது ஒருகோபம்!
பட்சணம் நிறையத் தின்றதைப் பார்த்துப்
பாட்டி தடுத்ததால் சிறுகோபம்!

இப்படி எங்கள் வீட்டினில் உள்ளோர்
யாவரும் கொண்டோம் ஒருகோபம்!
இனிப்புடன் காரம் சுவைமிகு பண்டம்
யாவும் இருந்தும் சிறுகோபம்!

செப்படி வித்தை போலவே இன்று
தீர்ந்தது எப்படி? ஒருகோபம்!
தேவியை வணங்கிப் புதுத்துணி உடுத்தினோம்!
சென்றது! எங்கள் சிறுகோபம்!

இகார் ஸிகார்ஸ்கி

(ஹெலிகாப்டரை உருவாக்கியவர்)



ரஷ்யாவில் கிவ் என்று ஒரு நகரம். அங்கு ஒரு சின்னப் பையன். எதையும் கூர்ந்து பார்த்து ஆராயும் துறுதுறுத்த கண்கள் அவனுக்கு. ஒரு நாள் அவன் தோட்டத்தில் உட்கார்ந்திருக்கும்போது ஒரு சின்னப் பறவை பூவுக்குப் பூ பறந்து சென்று உட்காருவதைக் கண்டான். அந்தப் பறவை பார்க்க அழகாக இருந்தது. அதன் உடலில் பளபளப்பான வர்ணங்கள். அது ஒரு தேன் சிட்டு. அத்தனை சின்னப் பறவையை அவன் பார்த்ததே இல்லை. அது பறந்தவிதமும் விநோதமாக இருந்தது. மற்றப் பறவைகளைப் போல் முன்னோக்கிப் பறக்கவில்லை அது. கயிற்றில் கட்டித் தொங்கவிட்டது போல் அப்படியே ஆகாயத்திலே அந்தரத்திலே நிற்க முடிந்தது, அந்தச் சின்னஞ் சிறு தேன் சிட்டினால். மேலே எழுந்தது. அதே போலக் கீழே இறங்கியது. பின்னோக்கியும் செல்ல முடிந்தது அதனால். இந்தச் செயல் அந்தப் பையனின் சிந்தையிலே பதிந்தது. அந்தச் சின்னப் பையனுக்கு அந்தச் சின்னப் பறவை மாறுபட்ட விதத்தில் பறப்பது பெரிய விஷயமாக இருந்தது. அதைப் பற்றியே அவன் சிந்தனை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. தேன் சிட்டின் இறக்கை இயங்கும் போது அதன் அசைவு வட்ட வடிவமாக அமைவதையும் கண்டான் சிறுவன். ஆனால் அந்தரத்திலே அந்தப் பறவை நிற்பது எப்படி என்பதை அறிய முடியாதபடிக்கு அதன் இறக்கை அத்தனை வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு நாள் அந்தப் பையனுடைய தாயார் அவனிடம் ஒரு புத்தகத்தைக் காட்டினாள். அது புகழ்பெற்ற விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறு. அதில் பிரபல விஞ்ஞானி, ஓவியர், தீர்க்கதரிசி எல்லாமான லியானர்டோ டாவின்சி வரைந்திருந்த சில வருங்கால அற்புதங்களின் குறிப்புக்கள் இருந்தன. அதில் ஹெலிகாப்டரைப் போன்ற ஓர் அமைப்பும் காணப்பட்டது. பையனுக்கு ஒரே மகிழ்ச்சி. முந்நூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த டாவின்சியும் இந்த விந்தை விமானத்தைப் பற்றிக் கனவு கண்டிருக்கிறார். ஆனால் அதை நினைவாக்க முடியவில்லை.

இந்தப் பையன் வளர்ந்து பெரியவனானான். படித்துப் பட்டங்கள் பெற்றான். அப்போதும், தேன் சிட்டுப் பறப்பதும், டாவின்சியின் குறிப்புக்களும் அவன் இதயத்தைவிட்டு அகலவே இல்லை. ரஷ்யாவில் வாழ்ந்த வேளையில் விமானங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோதும் அந்த நினைவு அவன் சிந்தையிலே உருண்டு கொண்டிருந்தது. ரஷ்யாவில் மாபெரும் புரட்சி ஏற்பட்ட சமயத்தில் அந்நாட்டைவிட்டு வெளியேற வேண்டி இருந்தபோதும் ஹெலிகாப்டர் அவன் இதயத்திலே கனத்துக் கிடந்தது. அமெரிக்காவுக்கு வந்தார் இகார் ஸிகார்ஸ்கி. ஆம், அந்தப் பையனின் பெயர்தான் இது. சின்ன வயதில் தேன் சிட்டு பறப்பதில் உள்ள புதுமையைக் கண்டு வியந்த சிறுவன் தான் இந்த இகார் ஸிகார்ஸ்கி. ரைட் சகோதர

ரர்கள் ஆகாயத்திலே பறந்த செய்தியைக் கேட்டபோதும் அவருடைய விந்தை விமானமான ஹெலிகாப்டரின் கனவு அவர் நெஞ்சத்திலே குடிகொண்டுதான் இருந்தது. புகழ் பெற்ற விஞ்ஞானியும் கண்டுபிடிப்பாளருமான தாமஸ் எடிசன் ரைட் சகோதரர்களின் முதல் விமானத்தைப் பற்றிக் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள், இகாரின் இதயத்திலே வளர்ந்துவரும் ஹெலிகாப்டர் கற்பனைக்கு இதமளிப்பதாக இருந்தது.

எடிசன் என்ன சொன்னார்? — 'இந்த விமானங்கள் உயரக் கிளம்புவதற்கு இத்தனை நீளமான 'ரன்வே' தேவைப்படும் வரை இவ்வித விமானங்களால் பயனேது மில்லை.'

எடிசனின் அபிப்பிராயத்தை அறிந்த போது இகார் 'உண்மையான கருத்து. என்னுடைய ஹெலிகாப்டருக்கு 'ரன்வே' தேவையில்லை. அது இருந்த இடத்திலிருந்து அப்படியே மேலே கிளம்பும் — தேன் சிட்டைப் போல!' என்றுதான் நினைத்திருப்பார்.

தம் கனவை நினைவாக்கும் ஆர்வமும் ஆசையும் இருந்தாலும் வாழ்க்கை வளமாக இல்லை இகார் ஸிகார்ஸ்கிக்கு. எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு ஹெலிகாப்டரை அமைப்பதில் ஈடுபடத்தக்க சீமான் இல்லையே அவர். அமெரிக்காவுக்கு வந்தபோது பரம ஏழை. அன்றாட உணவுக்கு உழைத்துப் பொருள் தேட வேண்டிய நிலை. ப்ரூக்லின், நியூயார்க் ஆகிய நகரங்களில் உள்ள தொழிலாளர்களின் சங்கங்களில் விஞ்ஞானத்தைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். அதில் கிடைக்கும் வரும்படி இருக்க ஒரு சின்ன அறையையும் உண்ண ரொட்டி, பீன்ஸ் இரண்டு மட்டுமே வாங்கப் போதுமானதாக இருந்தது.

கொஞ்சங் கொஞ்சமாக நாளா வட்டத்தில் இகாரின் நல்ல குணத்துக்கு நிறைய நண்பர்கள் உருவானார்கள். ஒரு விமானத் தயாரிப்புத் தொழிற்கூடம் நிறுவும் அளவுக்கு அவர்கள் பொருளுதவி செய்தார்கள் என்றால் இவர் எவ்வளவு நல்லவராக இருந்திருக்க வேண்டும்?

தமது விமானத் தொழிற்கூடத்தில் சளியாது உழைத்தார். நல்ல வெற்றி. அந்த நேரத்திலும் ஹெலிகாப்டரின் கனவை அவர் மறந்துவிடவில்லை.



பிரயாணிகளையும் பொருள்களையும் ஏற்றிச் செல்லும் மிகப் பெரிய விமானங்களை முதன் முதலில் தயாரித்தவர் இகார் ஸிகார்ஸ்கிதான். இவர் உருவாக்கிய 'கிளிப்பர்ஸ்' அட்லாண்டிக், பஸிபிக் சமுத்திரங்

களைக் கடந்து பறந்தது. விமானம் தயாரிக்கும் தமது மிகப் பெரிய தொழிற்சாலையில் மிக மிக எளியவராகத் தொழிலாளருடன் தொழிலாளியாகப் பழகுவார் இகார். கண்ணியம் மிக்க இவரைப் பற்றிப் பெரிய இடங்களிலெல்லாம் பேசலானார்கள். தொழிற்சாலைக்கு நிறைய ஆர்டர்கள் வந்து குவியலாயின.

1929ம் ஆண்டில் வெற்றி கொண்ட வாழ்க்கையின் உச்சியில் இருந்தார் இகார் ஸிகார்ஸ்கி. அந்த வேளையில் தமது மற்ற அலுவல்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி விட்டுத் தமது நீண்ட நாளையக் கனவான ஹெலிகாப்டரை உருவாக்குவதில் முனைந்தார். சின்ன அமைப்பு, சுழலும் பெரிய ரோடார் இறக்கைகள். புரொபல்லர் கிடையாது இந்த ஹெலிகாப்டர் விமானத்துக்கு. விமானத்தை ஆகாயத்திலே மேலே எழும்பி நிற்கச் செய்யவும் முன்னேறிச் செல்லவுமான இரு காரியங்களையும் ரோடார் இறக்கைகளே செய்தன. தம் கற்பனையில் கண்டபடி அதற்கு வடிவம் கொடுப்பதற்கான திட்டம் முழுமை பெற்ற போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

ஆனால் திட்டமிட்டபடி அதை விரைவில் உருவாக்க முடியவில்லை. விமானத் தொழிற்சாலையில் முடிக்க வேண்டிய ஆர்டர்கள் ஏராளமாக இருந்தால் தமது குறிப்புக்களை மூடி வைத்துவிட்டார். பத்து வருஷங்கள்—பெரிய பெரிய ஆகாய விமானங்கள் செய்து கொடுப்பதிலேயே கழிந்தது ஸிகார்ஸ்கியின் பொழுதெல்லாம்.

இரண்டாவது மகாயுத்தம். ராணுவத்தினருக்கு ஸிகார்ஸ்கி கனவு கண்டு கொண்டிருந்த சாதனம் அவசியத் தேவையாக இருந்தது. விமான தளம் இல்லாத இடங்களில் துருப்புக்களையும் துருப்புக்களுக்குத் தேவையான பண்டங்களையும் இறக்க, நீர்மூழ்கிகளுக்கு மீதாகப் பறந்து போக, மலைப் பகுதிகளில் முகாமிட்டுள்ள ராணுவத்தினருக்கு உணவும் மருந்தும் கொண்டு செல்ல இப்படி எத்தனை எத்தனையோ. ஸிகார்ஸ்கியின் கனவு விமானத்தின் உபயோகங்கள் எண்ணிலடங்காதவை.

ஜெர்மானியர்கள் இப்படி ஒரு சாதனத்தை அமைக்க முயன்று வருவதாக, வேறு வதந்தி பரவலாயிற்று.

இந்த நிலையில் ஸிகார்ஸ்கி தம் விமான வேலையை ஒதுக்கிவிட்டு மறுபடியும் தமது ஹெலிகாப்டருக்கு உயிர் கொடுக்கலானார். கனெக்டிக்கட்டிலுள்ள நியூ டவுன் என்ற ஊரில், தமது வீட்டில் விந்தை விமானத்தின் ப்ளூ பிரிண்டை விரித்தார். பிறருடைய குறுக்கீடுகளிலிருந்து விடுபட இரவு நேரங்களிலேயே வேலை செய்வார். அவரது அறையின் ஒரு மூலையில் ஒரு பழங்காலச் சிலை ஒன்று இருந்தது. அதன் முன்னால் மெழுகுவத்தி அசைந்தாடியபடி எரிந்து கொண்டிருக்கும். ஸிகார்ஸ்கி ஆத்மிகத்தில் நாட்டம் கொண்ட ஒரு விந்தை மனிதர். அவர் வேலை செய்யும் மேஜைக்கு அருகே பளபளவென்று மின்னும் பித்தளை ஜாடியில் சூடான காப்பி இருக்கும். இரவில் வெகு நேரம் வரை வேலை செய்யும் அவர் பல தடவைகள் காப்பி குடிப்பார். அயர்வு ஏற்படும்போது அமைதி ஏற்பட ஒரு போனோகிராஃப் இருந்தது. அதில் சங்கீதத்தை ரசிப்பார். இப்படிப் பலப் பல இரவுகள் — புராதனச் சிலை, சங்கீதம், காப்பி இவற்றிடையே 'டிராயிங் போர்டி'ல் தம்மை மறந்து கவிந்து கிடந்தார் ஸிகார்ஸ்கி.


ஸிகார்ஸ்கி குட்டையானவர். ஆனால் கெட்டியான உடல் அமைப்பு. உச்சந் தலையில் வழுக்கை. தொங்கு மீசை. விசித்திரமான மனிதர்தான் அவர்.

ஒரு வழியாக ஹெலிகாப்டரின் அமைப்புக்கான வரைபடங்களைப் பூர்த்தி செய்தார். முதல் ஹெலிகாப்டரை அமைப்பதற்கான உத்தரவும் கிடைத்தது. இகார் ஸிகார்ஸ்கி தமது நெடுநாளையக் கனவை நினைவாக்கி உருவாக்கிவிட்டார் ஒரு ஹெலிகாப்டரை. அதற்கு 'VS–300' என்று பெயரிட்டார். இதன் பிறகு மூன்று வருடங்கள் கழித்து 1942ல் ராணுவத்துக்கான முதல் ஹெலிகாப்டரை உருவாக்கித் தந்தார். அதற்கு 'XR4' என்று பெயர். தாம் உருவாக்கிய விந்தை விமானத்தைத் தாமே இயக்கிக் காட்டுவதாக அறிவித்தார் இகார் ஸிகார்ஸ்கி.

சேரவேண்டிய இடம் 'ரைட்' விமான நிலையம். நூற்றுக்கும் அதிகமான பத்திரிகைச் செய்தியாளர்கள், சினிமாக் காமிராக்கள், பறப்பதில் ஆர்வம்கொண்ட ரசிகர்கள் ஆகியோர் கூடி இருந்தனர், ஸிகார்ஸ்கி தம் விமானத்தை ஓட்டிக் காட்டுவதை எதிர்பார்த்து.

ஸிகார்ஸ்கி அமைதியாகத் தாம் உருவாக்கிய சாதனத்தை நோக்கி நடந்து போனார். கான்வாஸினால் மூடப்பட்டிருந்த அந்த விநோதமான யந்திரத்தின் 'காக்பிட்'டில், போய் அமர்ந்து கொண்டார். யந்திர ஓட்டத்தினால் அது லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. இகார் ஒரு லிவரை இழுத்தார். அவரது தலைக்கு மேலிருந்த பெரிய பிளேடுகள் சுழல ஆரம்பித்தன. மெதுவாக, வேகமாக, வெகு வேகமாகச் சுழன்றன. அதே சமயம் 'ஜிவ்வென்று' உயரக் கிளம்பியது விமானம். ஐந்தடி உயரம். திருப்தியின் சாயல் பூத்தது ஸிகார்ஸ்கியின் முகத்தில். இன்னொரு லிவரை இழுத்தார். அப்படியே பூப்போல் பூமியில் வந்து உட்கார்ந்தது. மறுபடியும் அதை உயரக் கிளப்பினார். ரோடார் பிளேடுகள் இனிமையான நாதத்தை எழுப்பியபடி சுழன்றன. ஸிகார்ஸ்கி தம் ஹெலிகாப்டரை முன்னே பின்னே, பக்கவாட்டில் எல்லாம் இயக்கிக் காட்டினார். நிருபர்களும் ரசிகர்களும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். ரைட் சகோதரர்கள் முதல் விமானத்தை ஓட்டிக் காட்டிய போதில் ஏற்பட்ட திகைப்பும் வியப்பும் அங்கு நிலவியிருந்தன. சிலர் இந்தப் புதிய விமானத்தினால் வருங்காலத்தில் என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்பதைப் பற்றிய கனவுகளில் மூழ்கியிருந்தனர். 'வீட்டு மாடியிலிருந்தே காரியாலயம் போகலாம். பெரிய 'ரன்வே' தேவையில்லை.' ஆனால் அந்த வேளையில் ஹெலிகாப்டரை உருவாக்கிய இகார் ஸிகார்ஸ்கியின் உள்ளத்தின் எண்ண ஓட்டம் யாருக்குத் தெரியும்? தமது நீண்ட நெடுநாளையக் கனவு நினைவானதை எண்ணி அவரது நெஞ்சம் எப்படிப் பூரித்துப் போயிருக்கும் ?

சிரிக்கச் சிரிக்க.. -சாமா-



அரசன் அளித்த பதில்

சு. ரா.

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவன் ஒரு நாள் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். வெகு நேரம் வேட்டையாடி, தன் கூட வந்திருந்தவர்களைப் பிரிந்து வெகு தூரம் சென்றுவிட்டான்.

அப்பொழுது பலத்த மழை வந்துவிடவே, ராஜா எங்கேயாவது தங்குவதற்கு எண்ணி அலைந்தான். ஒரு குடிசை அவன் பார்வையில் படவே, அதற்குள் நுழைந்தான்.

அங்கே ஒரு கிழவன் உட்கார்ந்து விறகுச் சுள்ளிகளை எரித்துக் கரியாக்கிக் கொண்டிருந்தான். சற்றுத் தூரத்தே ஒரு கிழவி உணவு சமைத்துக்கொண்டிருந்தாள்.

ராஜா தான் யார் என்று கூறாமல், ''ஐயா! நான் இங்கே தங்கிக்கொள்ளலாமா? மழை விட்டதும் போய்விடுகிறேன்'' என்றான்.

கிழவன் அப்போதுதான் ராஜாவைக் கவனித்தான். ''இருட்டி விட்டதே! இனி எங்கே போவீர்கள்? இரவு சாப்பிட்டுவிட்டு இங்கேயே தங்கலாம். காலையில் போய்க் கொள்ளலாம்'' என்றான்.

ராஜாவும் களைத்துப் போயிருந்ததால் அதற்குச் சம்மதித்தான். கிழவி இரண்டு பேருக்கும் உணவு படைத்தாள். சாப்பிட்டுவிட்டு நன்கு உறங்கினான் ராஜா.

காலையில் எழுந்ததும் ராஜா அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளும் போது, ''கிழவரே! நீங்கள் பிழைப்புக்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''இப்படி விறகுச் சுள்ளிகளைப் பொறுக்கி, கரியாக்கி, அருகேயுள்ள ஊரில் விற்று வருவேன். அதுதான் என் பிழைப்பு'' என்றான் கிழவன்.

ராஜா போய்விட்டான்.

கிழவனுக்கு அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது. கிழவனும், கிழவியும் நடுங்கியபடியே போனார்கள்.

அரண்மனைச் சேவகர்கள் அவர்களை ராஜாவின் முன் நிறுத்தியபோதுதான் கிழவனுக்குத் தன் குடிசையில் தங்கியவர் ராஜா என்று தெரிந்தது.

''மகாராஜா! நான் என்ன குற்றம் செய்தேன்?'' என்று அவர் காலில் விழுந்தான். ராஜா சிரித்தபடி அவனைத் தூக்கி நிறுத்தி, ''கிழவரே! களைத்திருந்த எனக்கு உணவளித்து, உறங்க இடமும் கொடுத்தீர்கள். அதற்குப் பிரதியாக உங்கள் கஷ்டம் தீர ஒரு சந்தனக் காட்டையே உங்களுக்குப் பரிசாகத் தருகிறேன்'' என்று கூறினான்.

பல நாட்கள் சென்றன. கிழவன் சௌகரியமாக இருக்கிறானா என்று பார்க்க ராஜா காட்டுக்குச் சென்றான்.

கிழவன் வழக்கம்போல் கட்டைகளைக் கரியாக்கிக் கொண்டிருந்தான். முன்பு சாதாரண விறகுச் சுள்ளிகள்; இப்பொழுது சந்தனக் கட்டைகள்!

''என்ன கிழவரே, சந்தனக் கட்டைகளை எரித்துக் கொண்டிருக்கிறீர்களே?''


''கரியாக்க எரித்துத்தானே ஆக வேண்டும்'' என்றான் கிழவன்.

''அடடா! சந்தனக் கட்டைகளின் மதிப்பு இந்தக் கிழவனுக்குத் தெரியவில்லையே!'' என்று வருந்தினான் ராஜா.


ஆண்டவன் சந்தனக்கட்டை போன்ற மதிப்பு மிக்க உடலை நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் நாம் அதை விறகு போல் உபயோகித்து, வாழ்க்கையைக் கரியாக்கிக் கொண்டிருக்கிறோம். உடலைச் சந்தனக் கட்டைபோல் தேய்த்துத் தேய்த்து உபயோகிக்கும்போது தான் — மக்கள் சேவையில் ஈடுபடும் போதுதான் — நாம் பிறவிப் பயனை அடைய முடியும்.

(பகவான் சத்திய சாயிபாபா கூறிய கதை.)





லே
ாலு!
ற்பனை:
பாண்டு
த்திரம்:
சல்லம்
அதெல்லாம் முடியாதும்மா! ராஜேஷ் பிறந்த நாள் பார்ட்டிக்கு நான் போக மாட்டேன். ரொம்பக் கர்வம் புடிச்சவன் அவன்.
பிறரைக் குறை சொல்றது கெட்ட குணம். ராஜேஷ் பணக்காரப் பையன். அதுனாலே நீ அப்படி நினைக்கிறே. நீ பார்ட்டிக்குப் போய்த்தான் ஆகணும்.
பாலுவா, வா...வா...! நீ வந்தது எனக்கும் ராஜேஷுக்கும் ரொம்ப மகிழ்ச்சி.
ான் நினைத்த மாதிரியே இருக்கு. ன் பணக்காரத்தனத்தைக் காட்ட ல்லாரையும் அழைத்திருக்கான்... யோ! ராஜேஷோட தங்கை பிரயம் புடிக்கிறளே. கர்மம்... கர்மம்...!
தாயே யசோதா உந்தன் மாயன் கோபாலன், செய்யும் ஜாலத்தைக் கேளடி, தாயே...டி
இனி என் அண்ணா ராஜேஷ் தன் வயலின் வாசிப்பால் உங்களை மகிழ்விப்பான்.
றையா ங்க அண்ணா த்த ஊர ஜாரா சிக்கிறான்.
கொர்... கொர்... டிரிங்... ரிங்
ஓவ்...வ்
வயலினா அது? சுத்த அறுவை! இந்தக் கூட்டத்துக்கு ஒரு லீஃப் கொடுக்கறேன் பாரு. அதோ கோபாலு குறட்டை விடறான். முதல்லே அவனை எழுப்பறேன்.
டேய், நான் இல்லேடா!
யாரோ அந்தப் பக்கத்திலிருந்து செய்த வேலை இது.
பாலுப் பயல் தான். விடாதீங்க அவனை... போட்டு அமுக்குங்க.
தமாஷ் ஆரம்பமாயிட்டுது. இனி பார்ட்டியும் களைகட்டிடும்.



ஐயோ, ராவகா.. இல்லே ராகவா!
சபாஷ்! என் பர்த்டே பார்ட்டிலே படையெடுப்பா, சண்டையா? வாலிஸ்வா...!
நாங்களும் இந்தக் கோலாகலத் திலே கலந்துக் கலாமா?
டேய், டேய்! பசங்களா, என்ன இப்படி? அமைதியா, அழகா விளையாடக் கூடாதா? ராஜேஷ் இப்படி வந்து உன் நண்பர்க ளுக்காக வயலின் வாசி,
முடியாதும்மா... என் வயலினை யாரோ உடைச்சுட்டாங்க.
ராஜேஷ்! உன் வயலின் உடைஞ்சதுன்னு அது உன் முரட்டுக் குணத்தைக் காட்டுறது. ஒரு நல்ல பையனோட லட்சணமா இது? அமைதியான விளையாட்டாக, உதாரணமா ஒளிஞ்சு பிடிக்கலாமே.
எங்கே, எல்லாரும் போ ஒளிஞ்சுக்குங்க. உங்க வெல்லாம் உமா பிடிக்க
ஏய் பாலு! பின்னாலே ஒளிஞ்சுக்க நல்ல இடம்,
ஓகே, ராஜேஷ்! நீ இவ்வளவு சமர்த்தா இருப் பேன்னு நான் நினைக்கல்லே,
உள்ளே வந்துடு. நான் தான் போட்டுட றேன்
ஹு...ஹா! பதிலேசரியான இடம். சாப்பாட டுக் கூடம்.
டேய், பாலு! இந்தப் பார்ட்டியைக் கலகலப்பாக்கினதுக்கு உனக்கு ரொம்ப தாங்க்ஸ். என் அம்மா எப்பவுமே இப்படித்தான். டிஸிப்ளின் வேண்டியதுதான். அதுக்கு நேரம் போது கிடையாதா? எங்க தாத்தா பெரிய வயலினிஸ் டாம். நானும் வயலின் வித்வானாக ணுமாம். யாருக்குப் பிடிக்குது? சுத்த அறுவை!
நமக்குப் பிடிக்க லேன்னு அப்படி லாம் சொல்லப் போகட்டும். எனக் முன்னாலே விருந் வைச்சுட்டே. ர நன்றிடா. ஸ்வீட் லாம் ரொம்ப இருக்கப்பா.'

எமது மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



கலைத்திறன் மிக்க
தரமுள்ள
நகைகளுக்கு

உம்மிடியார் ஜுவெல்லர்ஸ்

உம்மிடி ராமய்ய செட்டி, குருஸ்வாமி செட்டி & கோ.
23-25, நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் ரோட், சென்னை-1.
போன்: 31902 & 31758 — ஸ்தாபிதம்: 1905

தீபாவளி விசேஷ விற்பனை!



பட்டுப்புடவைகள்
நவீன ரகங்களில்
நூல் புடவைகள்
கைத்தறி
பின்னி & மில்
ஜவுளிகளுக்கு

போன்
442417

சேகர் எம்போரியம்

(ஓவர்பிரிட்ஜ் சமீபம்) கோடம்பாக்கம், சென்னை-24.



இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H

அவர்களின் விஜயம்

சந்திக்கும் விலாசங்கள்


1-ந் தேதி திருநெல்வேலி: நெல்லை லாட்ஜ், காலை 8 மணி முதல் 12 மணி வரை.
1-ந் தேதி நாகர்கோவில்: உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணபவன், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.
2-ந் தேதி மதுரை: மணீஸ் கபே, காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை.
2-ந் தேதி புதுக்கோட்டை: வஸந்தா லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை.
3 ந் தேதி காரைக்குடி: AVM. PL. ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணி முதல் 11 மணி வரை.
3-ந் தேதி அறந்தாங்கி: கோகுலம் லாட்ஜ், பகல் 12 மணி முதல் 1 மணி வரை.
3-ந் தேதி பட்டுக்கோட்டை: அசோகா லாட்ஜ், பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை.
3-ந் தேதி மன்னார்குடி: மன்னை லாட்ஜ், மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை.
4-ந் தேதி திருச்சி: ஹோட்டல் அஜந்தா, காலை 8 மணி முதல் 2 மணி வரை.
4-ந் தேதி கரூர்: பெரியார் உணவு விடுதி, மாலை 3-30 முதல் மாலை 5 மணி வரை.
5-ந் தேதி தஞ்சை: ராஜா ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.
5-ந் தேதி திருவாரூர்: அபூபக்கர் பில்டிங், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.
5-ந் தேதி நாகை: தினகர விலாஸ், மாலை 5 மணி முதல் 7 மணி வரை.
6-ந் தேதி காரைக்கால்: அசோக் லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.
6-ந் தேதி கும்பகோணம்: தாஜ்மஹால் லாட்ஜ், காலை 11 முதல் 2 மணி வரை.
6-ந் தேதி மாயவரம்: காளியாகுடி லாட்ஜ், பகல் 3 மணி முதல் 4-30 மணி வரை.
6-ந் தேதி கடலூர் N. T.: ஹோட்டல் பிருந்தாவனம், இரவு 7 முதல் 8-30 மணி வரை.
7-ந் தேதி பாண்டிச்சேரி: அருணா லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை, பழனி போன்: 316] [தந்தி: சித்தர்

இச்சிறுமி வளர்வதற்கு
நீண்டகாலமாகும்போல்
தோன்றுகிறது

ஆனால் காலம் காற்றாய்ப் பறக்கிறது

இன்றே ஒரு ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத் தொடங்குங்கள்



அலகாபாத் பாங்கிற்கு வந்து எங்களில் யாரிடமாவது கேளுங்கள் ரு. 5 மட்டும் செலுத்தி, உடனே ஒரு சேமிப்புக் கணக்குத் தொடங்கி விடலாம். அவ்வளவு சுலபம். நீங்கள் ஒழுங்காகச் சேமித்து வரும் சிறு தொகை எவ்வளவு சீக்கிரமாகப் பெருகி வருகிறது என்று ஆச்சரியப்படுவீர்கள். இன்னும் சௌகரியங்கள், சேவைகள் ......

- ரெக்கரிங் டிபாஸிட்டுகள் • கரண்ட் அக்கௌண்ட் • பிரயாணிகள் செக்குகள் • ஃபிக்ஸட் டிபாஸிட்டுகள் • ஸேஃப் டிபாஸிட் லாக்கர்கள்
- விவசாயத்திற்கான பணவசதி • சிறு தொழில்களுக்கு கடனுதவி
- உத்தியோகஸ்தர்களுக்குக் கடனுதவி

அலஹாபாத் பாங்க்
ஹெட் ஆபீஸ்: 14, இந்தியா எக்ஸ்சேஞ்ச் பிளேஸ்,
கல்கத்தா-1

நீங்கள் தாராளமாகப் பழகுவதற்குரிய தென்று உணர்த்துகிற

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்.



மபத்லால் க்ரூப் வழங்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்

AIYARS-M, 302 TM



ஆக்பா கலர் பிலிம்களில், கலர் பிரிண்ட்களுக்கு என்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட *ஆக்பா கலர் CNS நெகடிவ் பிலிம், மற்றும் தத்ரூபமான கலர் டிரான்ஸ்பரன்ஸிகளுக்கு என்று தயாரிக்கப்பட்டுள்ள *ஆக்பா கலர் CT 18 பிலிம்களும் உள்ளன.

சுருள் பிலிமாகவும், மற்றும் 35 mm பிலிம்களாகவும் இரு வகையிலும் கிடைக்கின்றன. எளிய முறையில் புரிந்துகொண்டு, செயலாற்றுவதற்கான விதிமுறைகள் ஒவ்வொரு பெட்டியிலும் வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டது.

விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆக்பா-கேவர்ட் டீலரை விசாரியுங்கள்:



AGI

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா - கேவர்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் - புது டெல்லி - கல்கத்தா - சென்னை

* புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவர்ட் ஆன்ட்வெர்ப்/லீவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்